கேலக்ஸியின்

இதழ் - 1

விண்மீன்

ஜூன் - 2025

மின்னிதழ்

பாண்டியன்
பொற்கிழி விருது
விவரம் உள்ளே



மூன்றாம் ஆண்டு
நிறைவு விழா
சிறப்பிதழ்

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

www.galaxybs.com

ISBN 978-81-989182-5-3

வரவேற்பு

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

அறிவும் சிந்தனையும்
உங்கள் வாசல் தேடி

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது

- ஔவையார்

+(91) 99944 34432
www.galaxybs.com

விண்மீன் ஆரம்பம்

வணக்கம்

ஒரு கனவு... அதுவும் நீண்டநாள் கனவு ஒன்று நிறைவேறியிருக்கிறது. நமக்குள் எத்தனையோ கனவுகள் இருக்கும், அத்தனை கனவுகளையும் நம்மால் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதுதான் என்றாலும் சில கனவுகளை நாம் நிறைவேற்ற தூண்டுகோலாய் ஒரு உறவோ, நட்போ நாம் எதிர்பாராத நேரத்தில் நம்மோடு கைகோர்த்து, தோளோடு தோள் நிற்கும். அப்படித்தான் ஓராண்டுக்கு மேலான கேலக்ஸியின் கனவை நாம் இப்போதே நிறைவேற்றுவோம், நான் இருக்கிறேன் எனக் கைகொடுத்தார் மருத்துவர் சென்பாலன். விண்மீனைப் பிரசவித்தவர் இவர்தான்.

கடந்த இரண்டு வருடமாக பேசும் போதெல்லாம் 'நாம ஒரு மின்னிதழ் கொண்டு வரணும் தம்பி, அதுக்கான வேலையை உடனே ஆரம்பிக்கணும்' என்று சொல்வார் பாலாஜி அண்ணன். அப்படி ஒரு எண்ணத்தை நிறைவேற்ற இயலாமல் வேலையும் சூழலும் 'இந்தா... அந்தா...' என இழுத்துக் கொண்டே சென்றது. 'உடனே செய்வோம். நான் பார்த்துக் கொள்கிறேன்' என மருத்துவர் முன்நிற்க, இந்த ஒரு வாரத்துக்குள் எல்லாம் முடிவாகி, இதோ எங்கள் கேலக்ஸியின் 'விண்மீன்' காலாண்டிதழ் மின்னிதழாய் மலர்ந்திருக்கிறது.

நான் எப்போதும் இந்த வருடத்தின் 'நிறைவு விழா' என்று சொல்வதை விட அடுத்த ஆண்டின் 'துவக்க விழா' என்று சொல்வதையே விரும்புவேன். நிறைவைவிட துவக்கம் சிறப்பாக இருந்தால் மனநிறைவு மகிழ்வாய் நமக்குக் கிடைக்கும். எங்களின் ஒவ்வொரு துவக்க விழாவிலும் புத்தக வெளியீட்டுடன் ஏதாவது ஒரு புதிய துவக்கதத்தை ஆரம்பிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறோம். அந்த வரிசையில் இந்த நான்காம் ஆண்டு துவக்க விழாவில் எங்களின் காலாண்டிதழ் ஆரம்பமாகிறது. இந்த ஆரம்பம் சிறப்பான ஆரம்பமாக இருக்கும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை.

விண்மீனைப் பொறுத்தவரை சாதாரண நட்சத்திரமாக பத்தோடு பதினொன்றாய் மின்னி மறையாமல், பெயர் சொல்லும் நட்சத்திரமாக, தனித்த நட்சத்திரமாக, உச்ச நட்சத்திரமாக வலம் வரச் செய்ய வேண்டும் என்பதே எங்களின் எண்ணமும் ஆசையும். ஆரம்பம் என்பது தொடர்ந்து செல்லத்தானே... நாங்களும் தொடர்ந்து பயணிப்போம். அதே சமயம் இது மின்னிதழாகத் தொடருமா அல்லது அச்சு இதழாக மாறுமா என்பதை எல்லாம் காலம் முடிவு செய்யும்.

வாசிப்புத்தான் நம்மை மேம்படுத்தும் எனபதை நாங்கள் உணர்ந்து இருப்பதால்தான் மாதாமாதம் 'கதைப்போமோ' என்றொரு நிகழ்வை நடத்துகிறோம். அதேபோல் எங்கள் இதழில் எழுதும் எழுத்தாளர்கள் சிறுகதை, கவிதைகளை விட கூடுதலாய் நூல் விமர்சனம் எழுத வேண்டும் என்பதே எங்கள் ஆவா. அதனால்தான் அதிகப் பக்கங்களை நூல் விமர்சனங்களுக்கு ஒதுக்கி இருக்கிறோம். அதேபோல் ஒவ்வொரு இதழிலும் ஒரு எழுத்தாளரின் பேட்டியையும் கொண்டு வரலாம் என்ற எண்ணமும் இருக்கிறது. புதிது புதிதாய் வரும் இதழ்களில் செய்வோம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரை முன்னனணி, பிரபல, வளர்ந்த, புதிய என்ற பிரிவுகளைக் கொண்டெல்லாம் எழுத்தாளர்களைப் பார்ப்பதில்லை. எங்கள் பதிப்பகத்தில் கூட நிறையப் புதியவர்களின் புத்தகங்களையே பதிப்பித்து வருகிறோம். இன்றைக்கு எழுதும் ஒவ்வொரு எழுத்தாளரும் எங்களுக்குப் பிரபலம்தான். 'என் எழுத்து என்னைப் பொறுத்தவரை சிறந்ததே... அதை உங்கள் முன் வைக்கிறேன். நீங்கள் முடிவு செய்யுங்கள் அதன் தரத்தை' என்று சொல்லும் ஒவ்வொருவரும் முன்னணி எழுத்தாளர்தான்.

எனவே எல்லாருடைய எழுத்துக்களுக்கும் எங்களால் முடிந்த வாய்ப்பை வழங்க இருக்கிறோம்.வரும் இதழ்களில் உலகின் எந்த மூலையில் இருந்தும் எங்களுக்குப் படைப்புக்களை அனுப்பலாம். அதிகமான படைப்புக்கள் வரும்பட்சத்தில் எங்களின் தேர்வுக்குழு மூலமாகத் தேர்வு செய்து படைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள இருக்கிறோம். விருப்பம் இருப்பவர்கள் எங்களுக்கு உங்கள் படைப்புக்களை அனுப்பித் தரலாம்.

தொடர்ந்து பயணிப்போம்.

'விண்மீன்' உச்ச நட்சத்திரமாய் வலம் வரும் என்ற நம்பிக்கையோடு...

- பரிவை சே.குமார்
ஆசிரியர்

வாழ்த்துப் பா

’காப்பியக்கோ’ ஜின்னாஹ் ஷெரிபுத்தீன்

இலங்கை

விண்மீன் எனும்மகுட மின்னூல் தனை”கெலக்சி”
திண்ணார் தொடங்கியுள்ளார் காலாண்டென் – எண்கொண்ட
சஞ்சிகையாய் ஆக்க இலக்கியங்கள் தம்மினுக்காய்
நெஞ்சம் மகிழவென்றன் வாழ்த்து!

இதழில்....

அறியப்படாத தமிழகம் - சௌமியா இராஜாராம் - 01

முதல்ல கிச்சன்ல இருந்து வெளில வாங்க....- சென் பாலன் - 03

உலை வாய் - பால்கரசு சசிகுமார். - 04

திருவரங்கம் கோவில் சேஷராயர் மண்டபம் - வெங்கட் நாகராஜ் - 07

சாபத்தின் சாட்சிகள் - ஹேமா - 09

காஃப்டா நூல் விமர்சனம் - செ.இராசாராம் - 10

மன அமைதி - ஜெஸிலா பானு - 11

பாண்டியன் பொற்கிழி - கேலக்ஸி குழுமம் - 12

கங்கணம் நூல் விமர்சனம் - பிலால் அலியார் - 14

தோரணமும், மாக்கோலமும் - கமலா முரளி - 15

காதல் பெருகட்டும் - சி.சதீஷ்குமார் - 16

மூன்றாம் பாலினம் - இத்ரீஸ் யாக்கூப் - 18

சிந்தனைகள் கூண்டுக்குள்ளே - நூர் பாத்திமா - 20

கன்னத்தில் முத்தமிட்டாள்...- பிரேம ராகவி - 21

நலம்.. நலம் அறிய ஆவல்.. - சக்தி - 22

அறியப்படாத தமிழகம்

சௌமியா இராஜாராம்

திரு. தொ.பரமசிவன் அவர்கள் பெரும்பாலும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களை எழுதியுள்ளார். அப்படி எழுதியதில் 'பாளையங்கோட்டை வரலாறு' என்னும் நூல் இதுவரை நாம் அறிந்திராத தகவல்களின் களஞ்சியமாகத் திகழ்கிறது.

'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்று நம் முன்னோர் கூறுவர். அவ்வாறு நாம் அறியாத பல தகவல்களையும், செய்திகளையும் கற்க ஒரு ஆரம்பப் புள்ளியாக நான் கருதும் புத்தகம் 'அறியப்படாத தமிழகம்'

நான் அறிந்த தமிழகத்தின் அறியாத தகவல்களை உள்ளடக்கி ஒரு கட்டுரைத் தொகுப்பாக நம்முன் வழங்கியிருக்கிறார் மறைந்த பேராசிரியர் முனைவர் தொ.பரமசிவன் அவர்கள். இவர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தலைவராகப் பணியாற்றியவர் என்பதைவிட தமிழகத்தின் முன்னணி ஆய்வாளர்களுள் முக்கியமானவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் 'அழகர் கோவில்', 'பரண்', 'மரபும் புதுமையும்', 'தெய்வம் என்பதோர்', 'பண்பாட்டு அசைவுகள்', 'விடுபூக்கள்' உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கிறார். திரு. தொ.பரமசிவன் அவர்கள் பெரும்பாலும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களை எழுதியுள்ளார். அப்படி எழுதியதில் 'பாளையங்கோட்டை வரலாறு' என்னும் நூல் இதுவரை நாம் அறிந்திராத தகவல்களின் களஞ்சியமாகத் திகழ்கிறது.

அறியப்படாத தமிழகம் என்னும் இந்நூலில் மிகச் சிறந்த, முக்கியமான ஏழு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவை,

- தமிழ்
- வீடும் வாழ்வும்
- தைப்பூசம்
- பல்லாங்குழி
- தமிழக பௌத்தம் எச்சங்கள்
- பேச்சு வழக்கும் இலக்கண வழக்கும்
- கறுப்பு

நம் நாட்டில் மனிதர்கள் வாழ்ந்த விதம், வாழும் முறை, பின்பற்றிய பழக்க வழக்கம், சடங்கு சம்பிரதாயங்கள் என அனைத்தையும் விரிவாகவும், தெளிவாகவும் இக்கட்டுரைகளில் விளக்கியுள்ளார்.

தமிழ்:

தமிழின் சிறப்பை எழுத உலக மொழிகள் போதாது, அப்படிப்பட்ட தமிழின் சிறப்புக்களை பாடியவர்களைப் பற்றியும், அவர்கள் தமிழைப் பற்றிக் கூறிய பல்வேறு செய்திகளைப் பற்றியும் இக்கட்டுரையில் எழுதியிருக்கிறார். இப்பொழுது வழக்கில் இல்லாத சொற்கள் பலவற்றை இதில் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு சொற்களுக்குப் பொருள் அறியாமலேயே நாம் நடைமுறையில் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். உதாரணத்திற்கு, 'காய்கறி' என்றால் காய்கறிகளைக் குறிக்கும் என்றுதான் நினைக்கிறோம். ஆனால் 'கறி' என்ற சொல் 'மிளகை' குறிக்கிறது. அக்காலத்தில் காரத்திற்கு மிளகாயைவிட மிளகையே அதிகம் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதிலும் மிளகை அதிகமாக இறைச்சியில் சேர்த்திருக்கிறார்கள், ஆகையால் இறைச்சிக்கு 'கறி' என்ற பெயரையே நாம் நடைமுறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு இன்னும் பல அறியாத சொற்களைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் நமக்கு வழக்கியிருக்கிறார்.



வீடும் வாழ்வும்:

இக்கட்டுரையில் மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறு அமைந்திருந்தது என்பதனை தன் நடையில் நமக்குப் படைத்துள்ளார். அக்காலத்தில் மக்கள் மிகுந்த கடவுள் நம்பிக்கை உடையவர்களாக வாழ்ந்தனர். ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனி தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் இருந்தன என்ற விபரங்களை பகிர்ந்துள்ளார்.

அதேபோல் நாம் இக்காலத்தில் திருமணத்தில் பயன்படுத்தும் தாலியையும் மஞ்சளையும் பற்றி நமக்குத் தெரிந்த தகவல் குறைவு. அக்காலத்தில் திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இல்லை என்ற வழிவழிச் செய்தி ஒன்று உண்டு. அதன்பிறகு பல அறிஞர்களின் ஆய்வுகளின் பேரில் தமிழ்நாட்டில் இவ்வழக்கம் இருந்ததாக தெரிய வந்தது. தாலிகள் இனத்திற்குத் தகுந்தாற்போல் மாறுபடும். சில தாலிகளில் உருவ பொம்மைகளை பயன்படுத்தும் வழக்கு இருந்துள்ளது, இப்போதும் இருக்கிறது. இந்தக் கட்டுரையிலும் நாம் அறியாத பல விசயங்களை எழுதியிருக்கிறார்.

தைப்பூசம்:

தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் பல்வேறு விழாக்கள் எதற்காக கொண்டாடப்படுகின்றன என்பது நமக்குத் தெரியாது என்றாலும் கொண்டாடுவோம். அப்படியான விழாக்கள் ஏன் கொண்டாடப்படுகிறது..? எதற்காக கொண்டாடுகிறார்கள்..? என்ற வினாவுக்கான விடையை இக்கட்டுரையில் நமக்குத் தெளிவாகத் தந்திருக்கிறார்.

பண்டைய காலத்தில் இருந்த வழக்கங்கள் இப்போது மாறி இருக்கிறது. தீபாவளி என்றால் நரகாசுரன் என்னும் அசுரனை வதம் செய்த நாளை நாம் கொண்டாடுகிறோம் என்பதுதான் நமக்குச் சொல்லப்பட்ட கதை. உண்மையில் அந்நாளை நாம் ஏன் கொண்டாடுகிறோம் என்பதை இக்கட்டுரையில் நமக்குச் சொல்லியிருக்கிறார். இதேபோல் கட்டுரைத் தலைப்பான தைப்பூசம் குறித்தும் விரிவாக எழுதியிருக்கிறார்.

பல்லாங்குழி:

அக்காலத்தில் நம் முன்னோர்கள் விளையாடிய விளையாட்டுகளான தாயம், பல்லாங்குழி, ஆடுபுலி ஆட்டம் போன்ற விளையாட்டுக்கள் இப்போது அதிகம் விளையாடப்படுவதில்லை. இதில் குறிப்பாக வயதிற்கு வந்த பெண்களுக்கு சீராக பல்லாங்குழிக் கட்டையும் சேர்த்து தருவது வழக்கில் இருந்தது, இன்றும் அது நடைமுறையில் இருக்கிறது. அதுபோல உரல், உலக்கை இவற்றையெல்லாம் பயன்படுத்திய நாட்களும் கரைந்து விட்டன.

தாயம், பல்லாங்குழி போன்ற விளையாட்டுக்கள் இப்பொழுதும் சில இடங்களில் விளையாடப்படுவது ஆறுதல் அளிக்கிறது. மதிக்கத்தக்க பொருளாக இருந்த அனைத்தும் இப்போது மதிப்பில்லாத ஒன்றாக மாறியிருப்பது காலத்தின் கோலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இக்கட்டுரையில் நாம் அறிந்திராத இன்னும் சில விளையாட்டுகள், பொருட்கள் குறித்து எழுதியிருக்கிறார்.

தமிழக பௌத்தம்: எச்சங்கள்

சாதி, மதம் ஆகியவற்றால் ஏற்படும் குழப்பங்களைத் தீர்த்து வரும் இக்காலத்தில் மதங்களால் நமக்கு ஏற்பட்ட நன்மைகளையும் அதன் சிறப்பையும் இக்கட்டுரையில் விளக்கமாக எடுத்துரைக்கிறார். இவை மட்டுமல்லாமல் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசியல் உலகில் சூறாவளியாகக் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' ஆகிய சொற்கள் உருவெடுத்தன. இவை 'புத்தம், தர்மம், சங்கம்' ஆகிய பௌத்த மும்மைக் கோட்பாட்டின் மறுபிறவியாகும் என்பதை கூர்ந்து கவனித்தால் உணரலாம்.

இதில் முக்கியமாக கருதப்படுபவர்கள் சித்தர்கள். அதிகாரங்களுக்கு கட்டுப்படாமல் சாதியாலும், சமயத்தாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக இருந்தவர்கள் இவர்கள். சித்தர்கள் மக்களிடத்தில் செல்வாக்கு பெற்றதற்கு இதுவும் ஒரு காரணம் எனலாம். ஒவ்வொரு மதமும் அதற்கெனத் தனி சித்தர்களை கொண்டிருந்தது என்ற செய்தி நமக்குப் புதிது.

சில மொழிகள் உருவாவதற்கு இந்த மதங்களும் காரணமாக இருந்தன போன்ற தகவல்களுடன் இன்னும் பல அறியாத தகவல்களை இக்கட்டுரை மூலம் நாம் அறியத் தந்திருக்கிறார் பேராசிரியர் தொ.பரமசிவன்.

பேச்சு வழக்கும் இலக்கண வழக்கும்:

அக்காலத்தில் பேச்சு வழக்கிற்கும் இலக்கண வழக்கிற்கும் கடுகளவு வித்தியாசம்தான் இருந்தது. ஆனால் இப்போது எழுதுவதற்கும் பேசுவதற்கும் அதே கடுகளவு கூட சம்பந்தம் இல்லாமல் போய்விட்டது. ஏனெனில் தமிழோடு நாம் ஆங்கிலமும் கலந்து பேசுகிறோம். சில சொற்களை நாம் பயன்படுத்தும் போது ஒரு பொருளிலும், இலக்கணத்தில் அதே வேறொரு பொருளிலும் அமைந்திருப்பதைக் காண முடியும்.

தமிழை நாம் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் அதனுடைய தன்மை என்ன என்பதையும் மிகத் தெளிவாக இக்கட்டுரையில் எழுதியிருக்கிறார். உதாரணத்திற்கு, 'சீமை' என்ற சொல்லுக்கு 'நாடு' என்று பொருள். நாட்டுச் சக்கரையை சீமைச் சக்கரை என்று கூறமாட்டோம்.

அதேபோல் சீமைக் கருவேல் என்பதனை நாட்டுக் கருவேல் எனப் பயன்படுத்துவதில்லை என்பது போன்ற பல விசயங்களை எடுத்துக்காட்டுகளுடன் மிகத் தெளிவாக இக்கட்டுரையில் விளக்கியுள்ளார்.

கறுப்பு:

வண்ணம் என்ற சொல் அழகு, இசை, ஒழுங்கு என்ற பொருள்களைத் தந்தது. ஆனால் அதுவே இக்காலத்தில் நிறவெறியாக உருவெடுத்துள்ளது. கறுப்பின மக்கள் வெள்ளைக்கார மக்களிடம் பெற்ற அவமானங்களை இது நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது. அதேபோல் கறுப்பாக இருப்பவன் கீழ்சாதிக்காரன் என்றெல்லாம் நிறவெறி உருவெடுத்தது, ஆனால் உண்மையில் கறுப்பு என்பது அழகுக்குரிய நிறமாகவும், கறுப்பு என்றால் 'கருத்த' என்ற பொருளிலும் அமைந்து வருகிறது.

முடிவுரை:

இவ்வாறு பல்வேறு புதிய செய்திகளை உள்ளடக்கி, என்னளவில் இது ஒரு சிறந்த கட்டுரை நூலாக உள்ளது. இதிலிருக்கும் செய்தியினை வேறிடத்தில் தேடி அலைவதைவிட தேடுபவர்களுக்கு நம்மை பதில் கூற வைக்கும் நூலாகத் திகழ்கிறது வரலாற்று ஆய்வாளர், முனைவர் தொ.பரமசிவன் அவர்களின் அறியப்படாத தமிழகம்.

முதல்ல கிச்சன்ல இருந்து வெளில வாங்க....

சென் பாலன்

தமிழ்நாட்டு உணவுப் பழக்கவழக்க முறையின்படி சாப்பிட வேண்டுமானால் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒருவர் தினசரி எட்டு மணி நேரத்திற்கும் குறையாமல் அடுக்களையில் உழைத்து சமைக்க வேண்டும். அலுவலகத்திற்குச் சென்று எட்டு மணி நேரம் கடும் பணி செய்வதற்கு ஒப்பானது அது.

இவை இல்லாமல், காய்கறி மளிகை பொருட்கள் வாங்குவதற்கான நேரம் தனி. என்ன சமைக்கலாம் என யோசிப்பதில் வீணாகும் நேரம் தனி. மசாலா பொருட்கள், பொடி வகைகள் அரைப்பதற்கான நேரம் தனி.

சினிமா, டிவி, கிரிக்கெட் போன்றவற்றில் வீணடிக்கும் நேரத்தைவிட அதிக அளவு நேரத்தை சமையல் அறையில் வீணடிக்கின்றோம். அடுக்களைக்கான பொருளாதார முதலீடுகள், செலவுகள் வேறு டாபிக், அதைத் தனியாகவே எழுதலாம்.

அதிக வேலைப்பளு, முதலீடு, செலவு காரணமாகத்தான் இந்திய உணவகத்தின் விலைகளும் அதிகமாக உள்ளன. 2000 ரூபாய் இல்லாமல் குடும்பமாக டின்னர் செல்வதற்குப் பதில் வியாழக்கிழமை சாய்பாபா கோவில் வாசலில் உட்காரலாம். குறைந்த விலையில் பசியாற தரமான உணவு எங்குமே கிடைப்பது இல்லை. சர்வைவலுக்கு தொடர்பே இல்லாத உணவு முறையில் தற்போது சிக்கியுள்ளோம்.

இந்த இழுவையான உணவு முறைக்கு ஆரோக்கியம், பாரம்பரியம், கலாச்சாரம், குடும்ப பிணைப்பு, பாசம், கடலை புண்ணாக்கு, பருத்திக் கொட்டை என்ற ஜிமிக்கிகள் வேறு. சட்டி சட்டியாக சோற்றை உள்ளே தள்ளிக் கொண்டே பர்கர் எல்லாம் கெட்டது தெரியுமா என்று வகுப்பெடுக்கின்றனர்.

“மூனு வேளையும் நாங்க அப்பப்ப செஞ்சு தான் சாப்பிடுவோம்” எனும் பெருமைக்கும் குறைச்சல் இல்லை.

சமைக்க மூன்று மணி நேரம், அதை பரிமாறி சாப்பிட முக்கால் மணி நேரம். வாரத்தில் ஒருநாள் உணவுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் பரவாயில்லை. எல்லா நாட்களிலும் மூன்று வேளையும் விருந்து போல் சாப்பாடு. காலையில் மல்லிகைப் பூ மாதிரி இட்லி, குறைந்தபட்சம் ரெண்டுவகை சட்னி. மதியம் சோறு, குழம்பு, கூட்டு, பொரியல் ரசம், தயிர், நேரம் இருந்தால் பாயசம். சுகர் இருப்பதால் இரவு ஒரு பனீர் பட்டர் மசாலா சப்பாத்தி. இது தவிர இரண்டு வேளை டீ, காபி. ஒருவேளை ஸ்னாக்ஸ். இத்தனை சமைத்த பாத்திரங்களையும் கழுவுவதற்குள் அடுத்தநாள் வந்துவிடுகிறது. இதில் 99% பாதிக்கப்படுவது பெண்களே. ஆனால் அதற்காகவே அவதரித்ததைப் போல ஆர்வமுடன் இயங்குவதைப் பார்த்தால் நமக்கெதுக்கு வம்பு எனத் தோன்றுகிறது.

வயதானாலும், உடல்நலம் இல்லாவிட்டாலும் கூட அதற்கு விடுமுறை இல்லை. அதிக உடல் உழைப்பு கோராத, எளிமையான உணவுமுறைகள் இளக்காரமாகப் பார்க்கப்படுகின்றன. ஏற்கனவே அப்படி இருந்தவற்றையும் புறக்கணித்துவிட்டோம். கம்யூனிட்டி கிச்சன் போன்ற வாய்ப்புகளும் அதிகமாக இல்லை. வீட்டில் மூன்று வேளையும் உணவு தயாராக இல்லாவிட்டால் சிலருக்கு கைநடுக்கமே வந்துவிடுகிறது. இன்னும் ரிவர்சில் போய் மசாலா பொடிகளும் வீட்டிலேயே அரைக்க வேண்டும் என்பது போல எண்ணங்கள் வரத் தொடங்கியுள்ளன. அதிக உணவு, உடல் பருமன் எனும் நிலைக்கு மொத்த சமூகமும் வந்துவிட்டது. இருந்தும் உணவின் மீதான ஆர்வம் மட்டும் குறையவில்லை. ஆரோக்கியம், பாரம்பரியம், பாசம் என்று காரணம் காட்டி நாக்கிற்கு பின்னால்தான் வரிசை கட்டி நிற்கிறோம். இந்த உண்மைக் காரணத்தை சொல்ல யாருக்கும் மனம் வரவில்லை.

இது ஒரு சுழல், மேலும் மேலும் மெருகேற்றுவதாக நினைத்துக் கொண்டு உள்ளிழுத்துக் கொண்டே செல்கிறது. சமூகத்தின் 50% workforce-ஐ நாக்குக்காக வீணடிக்கின்றோம்.

இந்நிலையில் புதிய கண்டுபிடிப்புகள், சிந்தனைகள் இந்தியாவில் இருந்து வரவில்லையாம்.

எப்படி வரும்?

முதல்ல கிச்சன்ல இருந்து வெளில வாங்கய்யா...

உலை வாய்

பால்கரசு சசிகுமார்
(காரைக்குடி), அபுதாபி

எப்பவும் வெள்ளையும் சொள்ளையுமாய் இருக்கும் கந்தசாமியைத்தான் அந்த ஊர் பார்த்திருக்கிறது. அவரும் அதே மிடுக்கோடுதான் ஊருக்குள் வலம் வருவார். உலக விசயங்கள் எல்லாம் தெரிந்த அறிவாளியாகவே அவர் அந்த ஊர் மக்களிடம் தன்னைக் காட்டிக் கொள்வார். எதைச் சொன்னாலும் இந்த வருடத்தில், இந்த மாதத்தில் எனச் சொல்லித்தான் ஆரம்பிப்பார். அவரின் பேச்சும் மிடுக்குமே ஊருக்குள் 'அவனுக்கு எல்லாம் தெரியும்... அவன் சொன்னால் சரியாக இருக்கும்' என அவர் மற்றும் அவருக்கு முந்தைய தலைமுறையாட்களும், 'அவர் விபரமானவர்' எனப் பிந்தைய தலைமுறையும் சொல்ல, தானே பெரியவன் என்ற எண்ணம் அவருக்குள் மெல்ல மெல்ல வளர்ந்து ஊர்த் தலைவன் என்ற கர்வம் மெல்லத் தலை தூக்கி இருந்தது.

கம்பீரமான தோற்றம், கணீர்க்குரல், மிடுக்கான நடை எனக் கிளியூருக்குள் எப்பவும் கெத்தாக நடமாடும் கந்தசாமி, ஊர் நிகழ்வுகள் எல்லாம் உற்சவசாமியாகத்தான் இப்போதுவரை இருக்கிறார். ஊரும் அப்படித்தான் நினைத்தது, அவரும் அப்படியே ஆகிப் போனார். அது பதவி ஆசை கொண்ட மயக்கநிலை என்றும் சொல்லலாம்.

அந்த ஊரைப் பொறுத்தவரை அவரின் பேச்சுக்கு எப்போதுமே மறுபேச்சுஇருந்ததில்லை. ஊரில் நடக்கும் நல்லது கெட்டது எதுவாக இருந்தாலும் அவர் அனுமதி கொடுத்தால் மட்டுமே நடக்கும் என்பதுபோல் ஒரு பிம்பத்தை உருவாக்கி வைத்திருந்தார், அதை அப்படியே ஏற்றுக் கொள்ள ஒரு கூட்டமே இருந்தது. ஏன் இன்னும் சொல்லப் போனால் சிலர் வடக்குத் தோட்டத்தில் என்ன விதைக்கலாம், தெற்குத் தோட்டத்தில் என்ன விதைக்கலாம் என்று கூட அவரிடம் அனுமதி கேட்பதுண்டு. என்னடா இதைக்கூட இந்தாளுக்கிட்ட கேக்குறானுக எனச் சிலருக்கு சிரிப்பு வருவதுண்டு என்றாலும் எதிர்த்துச் சொல்ல எப்போதும் தயக்கம் அவர்களுக்குள் இருந்து கொண்டே இருந்தது. தன்னை எதிர்க்க ஆளில்லை என்ற எண்ணமே கந்தசாமி 'சாமி'யாக மாறக் காரணமாகவும் இருந்தது.

இப்படி ஊருக்குள் எது செய்வதென்றாலும் அவரிடம் கேட்டே செய்ய வேண்டுமெனத் தினமும் விடியல் முதல் இரவு வரை ஆட்கள் அவர் வீட்டு வாசலில் காத்திருக்க ஆரம்பித்ததால் நாந்தான் சாமி என்ற அதிகார போதை மேலும் கூடிக் கொண்டே போனது.

கந்தசாமி காலையில் எந்திரிச்சுக் குளித்து, வெள்ளை ஜிப்பாவுடன் வீட்டு வாசலிருக்கும் வேப்ப மரத்தடியில் போட்டிருக்கும் நாற்காலியில் ஒரு தோரணையுடன் உட்கார்ந்து வெள்ளையம்மா கொடுக்கும் காபியைக் குடித்தபடி அமர்ந்து வீதியை வேடிக்கை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்.

அப்படியான ஒரு காலைவேளையில் "அடியே வெள்ளையம்மா... தேத்தண்ணி என்னாச்சு..? சீக்கிரம் கொண்டா..." என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்த போது பின் பக்கம் செருமியபடி கோவிந்தன் வந்தார்.

"அடடா... கோவிந்தா வாப்பா வா... வந்து உக்காரு... என்னது காலங்காத்தால வந்திருக்கே?" என்றவர், "வெள்ளையம்மா... அப்படியே இன்னொரு டம்ளர் சேத்துப்போடு... கோவிந்தன் வந்திருக்கிறார்" என்றார்.

"அதெல்லாம் வேண்டாம்ப்பா... நம்ம வீட்டுக்காபிய எப்ப வேணுமின்னாலும் குடிச்சிக்கலாம்... இப்ப எங்கூட வாங்க" என்றார் கோவிந்தன் பதட்டமாய்.

அவரின் பதட்டம் சாமியையும் பற்றிக் கொள்ள, நாற்காலியில் இருந்து எழுந்து வேஷ்டியை அவிழ்த்துக் கட்டியபடி "ஏய்... என்ன பதறுறே... என்னாச்சுப்பா..? வீட்டுல யாருக்கும்...?" என்றபடி எழுந்தார்.
“அதெல்லாம் ஒண்ணுமில்ல... நடக்கக் கூடாதது நடந்திருச்சு... நம்ம குருவம்மா மக கடசிப் புள்ள பேச்சியம்மா இருக்குல்ல... அது மருந்தக் குடிச்சுட்டு செத்துப் போச்சுப்பா... அந்தத் தெருவே அங்கதான் கூடி நிக்கிது." பதட்டத்தோடு சொல்லி முடித்தார் கோவிந்தன்.

"அடக் கூறுகெட்ட பயவுள்ள அடுத்த மாசம் அம்மனுக்கு காப்புக் கட்டனும் இப்பப் போயி இப்படியொரு காரியத்தப் பண்ணித் தொலச்சிருக்கு...?" என ஆத்திரமும் ஆதங்கமுமாய் சொன்னவர், "குருவம்மா மவ மருந்தக் குடிச்சிட்டாலாம். நா முன்னால போறேன்... நீயும் கௌம்பி வா" என உள்பக்கம் பார்த்துக் கத்திவிட்டு, வெள்ளையம்மாளின் பதிலுக்குக் காத்திராமல் நடக்க, கோவிந்தனும் பின்னாலயே நடக்க ஆரம்பித்தார்.

இருவரும் அந்த நிகழ்வுக்கான காரணம் என்ன என்பதைப் பேசியபடி குருவம்மாள் வீட்டை அடைந்தார்கள்.

அங்கு ஊரே கூடியிருந்தது.

தனது வருகைக்கான காத்திருப்புதான் அது என்பதை அவர் உணர்ந்து, அம்மனத் தூக்குறதுக்கும் செத்தவளப் பொதக்கிறதுக்கும் நாந்தான் அனுமதி கொடுக்க வேண்டியிருக்கு என்ற பெருமிதப் பார்வையோடு வீட்டுக்குள் போனார்.

இவரைப் பார்த்ததும் குருவம்மா 'பாத்தியளா... பாவி இப்படிப் பண்ணிட்டாளே... எனக்கு இனி யாரிருக்கா...' என அவள் கதறி அழ, எத்தனையோ முறை அணைத்த கைகள் இப்போது அணைக்க முடியாமல் அவரின் மனசு தவிக்க, பார்வையைத் தாழ்த்திக் கொண்டு 'விடு... இனி அழுது... கண்டிக்க வேண்டிய நேரத்துல கண்டிக்கல... அது போக்குல போச்சு... எத்தன தடவை நான் கண்டிச்சிருப்பேன். நீதான் கேட்டியா இல்ல அவதான் கேட்டாளா... இந்தா அவன் உசுரோடதானே இருக்கான்.' எனச் சத்தமாகச் சொன்னார்.

கலங்கிய கண்களைத் துடைத்தபடி அங்கு நின்றவர்களைப் பார்த்து "சரி... ஆனது ஆயிப்போச்சு... இப்புடியே நின்னு... சட்டுப்புட்டுனு ஆகவேண்டிய காரியத்தப் பாருங்கப்பா... அப்பறம் இந்த விசயம் வெளிய யாருக்கும் தெரியக் கூடாது. காதோடு காது வச்சாப்ல இருக்கட்டும்..." என்றார் சற்றே மிரட்டும் தொனியில்.

சாமியின் உத்தரவிற்காக காத்திருந்த ஊர் மக்கள் வேகவேகமாக காரியத்தில் இறங்க, அடுத்த ஒரு மணி நேரத்தில் பேச்சியம்மாள் நடுக்குடியிருப்பு சுடுகாட்டில் சாம்பலானாள்.

பேச்சியம்மாள் செத்த சேதி அறிந்து வந்த பெருமாள் அவள் சாம்பலாகிக் கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சியில் இருந்து மீளாது தவித்தான்.

'நாம சொந்தமின்னாலும் முன்ன உள்ள பகையில ஒத்துக்கமாட்டானுக நாளைக்கு ரெண்டுபேரும் ஊரை விட்டே ஓடிப் போயிடலாம்னு சொன்னேனே? இப்படி செஞ்சிட்டியே பாவிச் சிரிக்கி' என மனசுக்குள் புலம்பி, பேச நினைத்த வார்த்தைகளையும் கரை புரண்ட கண்ணீரையும் வெளியே வரவிடாமல் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டு குருவம்மாவின் வீட்டுக்கு வந்தான்.

அங்கு இருந்தவர்களைப் பார்த்துப் பொத்தாம் பொதுவாய் 'யோவ்... அதுக்குள்ள ஏய்யா அவசர அவசரமா எரிச்சீங்க..? ' கோபத்தோடு கத்தினான்.

"அடே பெருமாளு... சாமி சொன்னதுக்கு மறுபேச்சு இங்க உண்டா? அதுபோக அவச்சாவுல போனவளப் போட்டா வச்சிருக்க முடியும்..? சரி விடு... அந்தப் பயபுள்ளக்கி ஆயுசு அம்புட்டுத்தான்..." என்றார் கோவிந்தன்.

"என்ன கத விடுறிய... இதுவரைக்கும் இப்புடிச் செத்தவுகளப் போட்டே வச்சதில்லையாக்கும். இருக்கவனுக்குன்னா ஒண்ணு இல்லாதவனுக்குன்னா ஒண்ணு... சாமி சொன்னாவளாம் இவுக செஞ்சாகளாம். யோவ் அந்தாளு புள்ளயாயிருந்தா இப்படிச் செய்வாரா...?" என்று பெருமாள் கேட்டதை ஊர் முழுக்க வாயை மூடி ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் பார்த்தது.

'அவம்புள்ளதானேடா...' என வாய் வரை வந்ததை வெளியில் சொல்லாமல் 'விடுடா... என்ன பேசுறே..?' என அதட்டினார் சீனிச்சாமி.

"இப்ப என்னவாம்...? அவ சாகுறதுக்கே இந்தப் பயதானே காரணம். போட்டு வச்சிருந்தா இவனையும் ஒண்ணாப் போட்டு எரிச்சிருக்கலாம்" எனக் கோபமாய் கத்தியபடி சாமி எழ, "நீங்க விடுங்க... சின்னப்பய... ஏதோ பேசணுமின்னு பேசுறான்."
"இப்பல்லாம் சின்னப்பயக ஆட்டமாத்தானே போச்சு... அந்தப் புள்ளக்கி சித்தப்ப மக்க, பெரியப்ப மக்க இந்தக் கூட்டத்துல இருக்கியதானே... பேசவிட்டுட்டு வேடிக்கை பாக்குறிய... இவனாலதான் அவ செத்தா. தூக்கிப்போட்டு மிதிங்கடா..." கந்தாசாமி கர்ஜித்தார்.

"என்னய தூக்கிப் போட்டு மிதிச்சிருவியளோ..? எவன் மிதிக்கிறான்னு பாக்கிறேன். யோவ் சொன்ன நீயே கை வச்சிப் பாரேன்... பெரிய மனுசன்னு பாக்கமாட்டேன்.... டேய்... வாங்கடா... வந்து கை வச்சிப் பாருங்கடா... இவன் ஏத்தி விடுறான்... இவன் பேச்சைக் கேட்டியன்னா நல்லாயிருக்க ஊரும் நாசமாப் போயிரும்" எனப் பெருமாள் குதிக்கவும் அவனைச் சிலர் இழுத்துப் போனார்கள்.

ஊர் சாமியின் பக்கம் நின்று பெருமாளைத் திட்ட ஆரம்பித்தது. தன்னை எல்லார் முன்னிலும் ஒருவன் அசிங்கப்படுத்திட்டானே என்ற ஆதங்கம், வலி கந்தசாமி முகத்தில் தெரிந்தது.

எழுந்து வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

எப்போதும் கம்பீரமாக நடக்கும் கந்தசாமியின் நடை, பெருமாளின் கேள்விக்குப் பின் செம்மறியாட்டு நடையாகிப் போனதை ஊரும் உணர ஆரம்பித்தது.

என்ன இருந்தாலும் ஊருக்குள் நானே தலைவன் என்ற சாமியின் அகங்காரத்துக்கு விழுந்த முதல் அடியாய் பெருமாளின் கேள்வி இருந்தது என்பதை அதன் பின்னான நிகழ்வுகள் சொல்லாமல் சொல்ல ஆரம்பித்தது.

நாட்கள் போகப் போக, கந்தசாமி வீட்டிற்கு வரும் ஆட்களின் வருகை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது, ஊருக்குள் நடக்கும் எல்லாவற்றிற்கும் சாமி அனுமதியை கேட்டுக் காத்திருந்தவர்கள் 'எதுக்கு இதுக்கெல்லாம் சாமிக்கிட்ட கேட்டுக்கிட்டு' என்று சின்னச்சின்ன விசயங்களில் அவர்களாகவே முடிவெடுத்து, இப்படிச் செய்யலாம்ன்னு இருக்கோம் எனத் தகவலாக அவரிடம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

பெருமாள் எதிர்ததில் என்ன தப்பு என நினைத்த இளவட்டங்கள் அவனின் பேச்சைக் கேட்க ஆரம்பித்தார்கள்.

அடுத்த மாதம் முளகொட்டுக்கு எப்பவும் சாமி ஏற்பாடு செய்யும் வழக்கமான கரகாட்டம் வேண்டாம், அரிச்சந்திரன் நாடகம் போடணும், புதுக்கோட்டைச் செட்டக் கொண்டு வரணும் என்று பெருமாளுடன் சேர்ந்து இளைஞர்கள் முடிவெடுத்தார்கள்.
எல்லாச் சனிக்கிழமையும் ஊரே கூடி நல்லது கெட்டது பேசுவது தலைமுறைகளாய் தொடரும் வழக்கமாக இருந்தது.

அன்றைய ஊர் கூட்டத்தில் பெருமாளும் இருந்தான். ஆளாளுக்குப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

" ஏப்பா... நல்லதோ கெட்டதோ நடந்தது நடந்து போச்சு... இப்ப ஏன் எல்லாரும் காலக் கட்டிக்கிட்டு உக்காந்திருக்கீங்க..? என்ன பேசணுமோ அதப் பேசுங்கப்பா... ஆகாவரி பேச்ச விட்டுட்டு ஆக வேண்டியதப் பாப்போம்" என்றார் கோவிந்தன்.

“அடுத்த வாரம் முத்துப் பரப்புறோம்... அதுக்கு அடுத்த வாரம் மொளக்கொட்டு, புதுக்கோட்டைச் செட்டத்தான் கொண்டு வரணும்... அம்புட்டுத்தான். அதுக்கான வேலைகளை நீங்கதான் பாக்கணும் சித்தப்பு' என கோவிந்தனைப் பார்த்துச் சொன்னான் பெருமாள்.

“டே ...சாமிக்கிட்ட கேக்காம நீங்களே முடிவெடுத்தா எப்படி.. எதுவா இருந்தாலும் சாமி சொல்லட்டும்... எளவட்டங்க கொஞ்சம் பேசாம இருங்க" என்ற குரல்கள் கூட்டத்தின் எல்லாப் பக்கமும் இருந்து வந்தது.

"என்னப்பா சாமி கம்முனு இருக்கீங்க.... எதாவது சொல்லுங்க" என்றார் கோவிந்தன்.



"ஊரு இப்பத்தான் மாறிப் போச்சே... அவுக சொல்றதுதான் நல்லதுன்னு நினைக்க ஆரம்பிச்சிட்டாக. பட்டாத்தான் தெரியும். மாற்றம் வேணும்ன்னு நிக்கிறவுககிட்ட நாஞ்சொல்லி... அவுக எண்ணப்படியே இந்த வருசம் நடக்கட்டும்” சற்றே குரலை உயர்த்தி, கடுகடுப்புடன் சொன்னார்.

எப்போதும் சாமி வார்த்தைக்கு கொக்கு மீன் பிடிக்க காத்திருப்பது போல் காத்திருந்தவர்கள் இன்று கழுகு இரைதேடுவதைப் போல் முடிவெடுக்கிறார்கள் என்பதை நினைத்து சாமியின் மூச்சுக் காற்று சற்று சூடாகவே வெளியேறியது.
திருவிழாவின் மொத்தப் பொறுப்பையும் பெருமாள் தலைமையில், இளைஞர் சங்க உறுப்பினர்கள் மேற்பார்வையில் யாருக்கும் எந்தக் குறையும் வராதவாறு பார்த்துக் கொண்டார்கள்.

எப்பவும் கரகாட்டத்தைப் பார்த்த கிளியூர் மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு புதுக்கோட்டை சரசின் ஆட்டமும், கருப்புச்சாமியின் பாட்டும் நடிப்பும் புதுமையாகவும் உற்சாகத்தையும் கொடுத்தது.

நாடகக் கொட்டகைக்கு அருகில் நாற்காலியில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த கந்தசாமிக்கு மனது ஒரு நிலையில் இல்லை. பேருக்கு நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாரே ஒழிய, கவனம் சிதறியிருந்தது.

‘எடுத்ததுக்கெல்லாம் நம்மகிட்ட கேட்ட பயலுக இப்ப எதையுமே கேட்க மாட்டேங்கிறானுங்க... பெருமாளு மட்டுமில்லாம எல்லா எளவட்டங்களும் இப்ப நம்மள மதிக்க மாட்டேங்கிறானுங்க... எல்லாத்துக்கு நீ சொன்னா சரியா இருக்கும்ன்னு நின்ன ஊரும் அவனுக பின்னாடி நிக்க ஆரம்பிச்சிருச்சுக... காரணம் என்னவாயிருக்கும்..? இல்லை குருவம்மா அடிக்கடி நம்ம தோட்டத்துக்கு வர்றதை இந்தப் பயளுக பார்த்துப்புட்டானுகளோ...? இல்ல அந்தப் பனங்குட்டிப் பிரச்சனையில மொங்காருக்கு ஒருதலைப்பட்சமா நடந்து கொண்டதால நமக்கு எதிராத் திரும்பிட்டானுங்களா..?" என அவரின் மனசுக்குள் விவாதம் நடத்திக் கொண்டிருக்கையில் நாடகத்தில் லோகிதாசன் இறந்த காட்சி வந்துவிட்டது...!

மொத்தத்தில் ஊர் தன்னை நிராகரிப்பதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் நினைத்துப் பார்த்த ஒவ்வொன்றும் கருக்கருவா நெல்லுத்தாளை அறுப்பது போல நெஞ்சுக்குள் அறுத்தது.

லோகிதாசன் செத்த சோகத்தில் ஊரே அமைதியாக நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

கந்தசாமி துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு எழுந்து கூட்டத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு, வேட்டியை அவிழ்த்து உதறிக் கட்டிக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பத் தயாரானார்..

"சாமி என்ன கிளம்பிட்டீங்க...? இனித்தானே நாடகம் நல்லாயிருக்கும்" என்றார் கோவிந்தன்.

“வீட்டு வரைக்கும் போய்ட்டு வர்றேன்..." என்றார் சாமி.

நாடகத்தில் சந்திரமதி, லோகிதாசனின் பிணத்தைத் தூக்கி மடியில் கிடத்திக் கொண்டு என் சாமி என கத்திக் கதறிக் கொண்டிருக்கையில்...

கந்தசாமி போய்க் கொஞ்ச நேரத்தில் வெள்ளையம்மாளும் தூக்கம் வருதெனச் சொல்லி வீட்டிற்குக் கிளம்பினாள்.

அவள் கிளம்பிப் போனச் சிறிது நேரத்தில் ‘அய்யோ.... சாமி இப்படிப் பண்ணிட்டீங்களே... நா என்ன செய்வேன்..'என ஊருக்குள் இருந்து உடைத்துக் கொண்டு வெளிவந்த வெள்ளையம்மாளின் அழுகைச் சத்தம் சந்திரமதியின் அழுகைச் சத்தத்தை மிஞ்சிக் கேட்டது.

நாடக மேடையில் இருந்து பதறி எழுந்த ஊர்ச்சனம் என்னமோ ஏதோவென கந்தசாமியின் வீட்டை நோக்கி ஓடியது.

திருவரங்கம் கோவில்

சேஷராயர் மண்டபம்

சேஷராயர் மண்டபத்தில் இடது புற ஓரம் வரிசையாக இருக்கும் தூண்களில் தசாவதாரச் சிற்பங்கள் உண்டு. அந்த வரிசையில் கடைசியாக இருக்கும் தூண் அருகே அமர்ந்து கொண்டு அந்தத் தூணில் இருக்கும் சிற்பங்களை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தேன்.

வெங்கட் நாகராஜ்

தமிழகம் வரும்போதெல்லாம் எங்கள் வீடு இருக்கும் திருவரங்கத்தில் உள்ள பெருமாள் கோவிலுக்குச் சென்று பெரிய பெருமாளை பார்த்து வருவது என்பதை பொதுவாக நான் கடைபிடிப்பதில்லை. இங்கே எப்போதும் பக்தர்கள் கூட்டம் தான்.

அதுவும் இந்த ஜனவரி மாதத்தில் மகர ஜோதி பார்த்து விட்டு வரும் ஐயப்ப பக்தர்களின் கூட்டமும், மேல்மருவத்தூர் சென்று திரும்பும் அல்லது செல்லும் பக்தர்களின் கூட்டமும் அதிகமாக இருக்கும். இதைத் தவிர வெளி மாநிலங்களில் இருந்து வரும் பக்தர்களின் கூட்டமும் அதிகம். எப்போதும் பக்தர்கள் கூட்டம் இருந்து கொண்டே தான் இருக்கிறது.

திருவரங்கம் முழுக்க இப்படியானவர்களை அதிகமாக பார்க்க முடியும். ஒவ்வொரு பயணத்திலும் இப்படியான சிலருடன் பேச வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படுவது உண்டு – அவர்கள் வழிகேட்டுச் சொல்ல, ஹிந்தியில் பேசி தகவல்களை தெளிவாகச் சொல்ல என பல முறை பேசியிருக்கிறேன்.

கூட்டம் அதிகம் இருப்பதன் காரணமாகவே கோவிலுக்குச் செல்ல கொஞ்சம் யோசனை வரும். அப்படியே சென்றாலும், பெரிய பெருமாளை கவனிக்காமல், நேரடியாக தாயார் சன்னதி சென்று தாயாரை தரிசனம் செய்துவிட்டு, "நான் வந்து சென்ற தகவலை உங்களவரிடம் சொல்லி விடுங்கள் தாயே", என்று சொல்லி விட்டு வருவதும், சக்கரத்தாழ்வாரை தரிசித்து திரும்புவதும் என்று தான் நடக்கும்.

ஆனால் ஒவ்வொரு திருவரங்கம் பயணத்திலும் ஒன்றிரண்டு தினங்கள் கோவிலுக்குச் சென்று ஆயிரங்கால் மண்டபம் அருகிலேயோ, அல்லது மணல் வெளியிலேயோ அரை மணி நேரம், ஒரு மணி நேரம் என அமர்ந்து கொண்டிருந்து விட்டு வீடு திரும்புவது வழக்கம்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை அன்று கூட மாலை நேரம் வீட்டிலிருந்து பொடி நடையாக நடந்து வடக்கு வாசல் வழி கோயிலுக்குள் புகுந்து நேரடியாகச் சென்று அமர்ந்த இடம் ஆயிரங்கால் மண்டபம் எதிரே இருக்கும் சேஷராயர் மண்டபத்தின் ஒரு தூண் அருகே!

சேஷராயர் மண்டபத்தில் இடது புற ஓரம் வரிசையாக இருக்கும் தூண்களில் தசாவதாரச் சிற்பங்கள் உண்டு. அந்த வரிசையில் கடைசியாக இருக்கும் தூண் அருகே அமர்ந்து கொண்டு அந்தத் தூணில் இருக்கும் சிற்பங்களை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தேன். நடுநடுவே நான் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகே வந்த சில பக்தர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலும் சொல்ல வேண்டியிருந்தது.

ஹிந்தியில் பேசிக் கொண்டிருந்த ஒரு நபர் என்னிடம் வந்து கஷ்டப்பட்டு ஆங்கிலத்தில் கோவில் பற்றிக் கேட்க, நான் அவருக்கு ஹிந்தியில் பதில் சொன்னேன். அவருக்குத் தெரிந்த பாஷையில் பேசியதும் அவருக்கு மகிழ்ச்சி.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எத்தனை அதி அற்புதமான சிற்பங்களைச் செதுக்கி இருக்கிறார்கள்! அதுவும் ஒரே கல்லில் அமைந்த தூண், அந்தத் தூணில் பகுதி பகுதியாகச் சிற்பங்களை, பெரிதும், சிறிதுமாக அமைத்து இருப்பதை பார்த்துக் கொண்டே இருக்கலாம். ஒவ்வொரு சிற்பமும் எத்தனை நேரம் எடுத்து செதுக்கி இருப்பார்கள், எத்தனை பேர் இந்த ஒரு தூணை செதுக்கி இருப்பார்கள், அல்லது ஒரே சிற்பியே பல நாட்கள் தனது உளியின் துணையோடு நகாசு வேலைகள் செய்து இந்த தூணை, தூணில் இருக்கும் சிற்பங்களை உருவாக்கி இருப்பார் என்ற எண்ணங்கள் மனதுக்குள் மோத சிற்பங்களை கவனித்துக் கொண்டிருந்தேன்.

❝ சேஷராயர் மண்டபம் அருகே ஒரு சரிவுப் பாதை அமைத்து அந்தப் பாதை வழி, அதாவது சேஷராயர் மண்டபத்தின் உள்ளேயே ட்ராக்டர் ட்ராலி போன்ற கன ரக வாகனங்களை அதிக எடையோடு செலுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஒரே சமயத்தில் அப்படியான இரண்டு வாகனங்களை அங்கே நான் இருந்த சமயம் பார்க்க முடிந்தது.....

அவ்வப்போது சில பக்தர்கள் செய்யும் செயல்கள் தொல்லைகளைத் தந்தாலும் – எனது கவனத்தினை சிற்பங்களிலிருந்து அகற்றி அவர்கள் செய்யும் விஷயங்களை (ஹிந்தியில் இப்படிச் செய்வதற்கு notanki நௌட்கி என்று ஒரு வார்த்தை உண்டு) பார்க்க வைத்தாலும், அதிலிருந்து மீண்டு, மீண்டும் சிற்பங்களில் மூழ்கி இருந்தேன். ஒரே ஒரு தூணில் இத்தனை வேலைப்பாடுகள் என்றால், சேஷராயர் மண்டபத்தில் இருக்கும் ஒவ்வொரு தூணையும் உன்னித்து கவனித்தால் எத்தனை விஷயங்கள் பார்க்க முடியும்.

அதிலும் ஒவ்வொரு சிற்பமும் ஏதோ ஒரு கதையையும் (நிகழ்வினையும்) சொல்லும் விதமாக அமைத்த அந்த சிற்பிகளின் திறனை நினைத்து பிரமிக்காமல் இருக்க முடியவில்லை. உதாரணத்திற்கு இந்த ஒரு தூணில் இருந்த ஒரு காட்சி – முதலையின் வயிற்றுக்குள் இருக்கும் அனுமனின் சிற்பம் – அந்த சிற்பம் சொல்லும் கதை என மனதுக்குள் நிறைய விஷயங்கள் வந்து போனது. அந்தக் கதை என்ன என்பது உங்களுக்குத் தெரியும் தானே? தெரியாதவர்களின் வசதிக்காக இங்கே சொல்லி வைப்போமே!

மூர்ச்சையாகி விழுந்து கிடைக்கும் லக்ஷ்மணனைக் காப்பாற்ற சஞ்சீவினி மூலிகையை எடுத்துவரச் செல்லும் அனுமனை எப்படியேனும் தடுத்து நிறுத்தும்படி இராவணன் விடுத்த கட்டளையின் பேரில் காலநேமி எனும் அரக்கன் ஒரு முனிவர் வேடம் கொண்டு வழியில் ஹநுமனைப் பார்த்து அங்கே இருக்கும் குளத்தில் குளித்து வந்தால் தான் பல விஷயங்களை சொல்லுவதாக சொன்னாராம் (தண்ணீர் கேட்ட ஹநுமனுக்கு அந்தக் குளத்தில் நீர் அருந்தும் படிச் சொன்னதாகவும் சில கதைகள் உண்டு!)

அந்தக் குளத்தில் சாபத்தினால் முதலையாக இருந்த இருந்த கந்தர்வ கன்னிகை ஹநுமனை விழுங்க, முதலையின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு தனக்கு எந்த வித சேதாரமும் இல்லாமல் வெளியே வந்தாராம்! சாபம் நீங்கப் பெற்ற அந்த கந்தர்வ கன்னிகையும் இந்தச் சிற்பத்தில் இருக்கிறார். சாபம் நீங்கிய அந்த கன்னிகை முனிவர் கபட வேடம் அணிந்தவர் என்பதையும் சொல்லிவிட, காலநேமி என்கிற அந்த அரக்கரையும் அழித்து பின்னர் சஞ்சீவினி மூலிகையை மலையுடன் கொண்டு வந்து இலக்குவனை காப்பாற்றினார் என்று போகிறது அந்தக் கதை. அந்தக் காட்சியை அப்படியே சிற்பத்தில் வடித்து இருக்கும் சிற்பியின் திறமையை என்னவென்று சொல்வது.

வேதனையான விஷயம்:

இப்படி சிற்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த சமயம் கோவிலில் பார்த்த விஷயம் மனதுக்கு மிகவும் வேதனையைத் தந்தது. பழமையை பாதுகாக்க வேண்டியது நமது கடமை என்பதை அரசாங்கமும் பொதுமக்களும் எப்போது தான் புரிந்து கொள்ளப்போகிறார்கள் என்று புரியவில்லை. பல வெளிநாடுகளில் ஐம்பது நூறு ஆண்டுகள் பழமையான விஷயங்களைக் கூட பொக்கிஷமாக பாதுகாக்கும்போது, நம் நாட்டில் பல நூறு ஆண்டுகள் கடந்த விஷயங்களை பாதுகாக்க கொஞ்சம் கூட அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்பது வேதனையான உண்மை.

சேஷராயர் மண்டபம் அருகே ஒரு சரிவுப் பாதை அமைத்து அந்தப் பாதை வழி, அதாவது சேஷராயர் மண்டபத்தின் உள்ளேயே ட்ராக்டர் ட்ராலி போன்ற கன ரக வாகனங்களை அதிக எடையோடு செலுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஒரே சமயத்தில் அப்படியான இரண்டு வாகனங்களை அங்கே நான் இருந்த சமயம் பார்க்க முடிந்தது.

இத்தனை பழமையான ஒரு கட்டிடம் – பெரிய வாகனங்கள் ஏற்படுத்தும் அதிர்வுகளை எப்படித் தாங்கும் என்பதைக் கூட சிந்திக்க மாட்டார்களா சம்பந்தப்பட்டவர்கள்? கொஞ்சம் அசந்தால் கூட அந்த வாகனம் தூண்களின் மீது இடித்து சிற்பங்கள் சிதிலப்படக் கூடும் என்பதைக் கூட சிந்திக்கவில்லையே! ஏற்கனவே காலத்தின் ஓட்டத்தில் எத்தனை சிற்பங்கள் பாழ்பட்டுவிட்டன... இப்படியான நிறைய வேதனை தரும் விஷயங்களை கோவில் உள்ளே பார்க்கும்போது மனதில் வேதனையே அதிகம் மிஞ்சியது.

நன்றி : படங்கள் திரு. வெங்கட் நாகராஜ்

சாபத்தின் சாட்சிகள்

ஹேமா
கேரளா



சமூக விலங்குகளுக்கிடையே சண்டை.
ஓயாத போர்.
மிகப் பெரிய போர்.
ஆண்டாண்டு காலங்களாக
உயிர்வதைகள்.
இரத்த வாடை காற்றில் கனக்கிறது.
எங்கும் ஓலங்கள்.
மறுதலிக்கப்படுகிறது
மனிதம்.
கொத்துக்கொத்தாய் மனித சடலங்கள்.
தேசப்பற்று, இனப்படுகொலை என்று எந்தப் பெயரும் பொருந்தும்.
கோடிட்ட இடங்களை நீங்களே
நிரப்பிக் கொள்ளுங்கள்.

இங்கு
போரை வரவேற்பவர்களுமுண்டு.
அவர்களுக்கு என்ன பெயர் என்று
நான் சொல்லத் தேவையில்லை.
போர்களில்
வல்லரசுகளும் வல்லினங்களுமே
எப்போதும்
வெற்றி கொள்கின்றன.
அவர்கள் வாகையில்
அவர்கள் அருந்தும் மதுவில்
அழுகிய உடல்களின்
நாற்றம் அடிப்பதைக் குறித்த
கவலையொன்றும் அவர்களுக்கு இல்லை.
புனிதத்தைக் கொண்டு வந்து நாட்டுப்பற்றில்
இடைச் சொருகுவார்கள்.
குழந்தைகள்
பெரும்பட்டினியில் சாவதை
கண்டுகொண்டே உணவு உண்கிறோம் நம் உணவுமேசையில்.
கண்முன்னே பெண்களும் குழந்தைகளும் துடிதுடிக்கச் சாகிறார்கள்.
சாமானியர்களின் சாவு வெறும் எண்ணிக்கைகளாக
மிஞ்சுகிறது செய்திகளில்.
போருக்குப் பிந்திய காலங்கள்
போரைவிடத் துயரமானவை.
தொடர்ந்து இச்செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகிவிடுவோம்.
ஆயினும்
நம்மால் செய்யவியன்றது எதுவுமேயில்லை.
நாம் சாபத்தின் சாட்சிகளாக இந்தக் காலக்கட்டத்தில் இவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே
வாழ்ந்து கொண்டிருக்கிறோம் அவ்வளவே.
ஆம்..
சாபத்தின் சாட்சிகள் நாம்...

காஃப்டா

- நூல் விமர்சனம்

செ.இராசாராம்
அபுதாபி - அமீரகம்

வணக்கம்!

இந்த நூலின் விமர்சனத்திற்குள் போகும் முன், பெரும்பாலும் நான் எந்த ஒரு நூலையும் வாசிக்கும் முன்பாக எழுத்தாளர் பரிவை சே குமார் அவர்களிடம் ஒரு மேலோட்டமான பார்வையைக் கேட்டுக் கொள்வேன், அவர் கூறும் கருத்துகளுக்குப் பின்பு வாசிக்க தொடங்கி விடுவேன். சில நூல்களை அவரே பரிந்துரைப்பார். அவர் மூலமாக வாசிக்கக் கிடைத்த நூல்தான் 'காஃப்டா'.

அதைவிட நான் இந்நூலை வாசிக்க தொடங்கும் முன்பே, மூன்றாண்டுகளுக்கு முன்பு கேலக்ஸியின் தொடக்க விழாவானது, ஒரு முப்பெரும் விழாவாக நடந்தது. அந்த விழாவில் நான் 'வேற்றுத் திசை' நூல் விமர்சனம் செய்து பேசியபோது சொன்ன ஒரு வார்த்தையே நினைவுக்கு வந்தது, 'உலகிலேயே மிகப் பெரிய தலித் இனம் பெண்கள்"தான் என்று, அது போன்ற ஒரு வாசகத்தோடு (தலித் முத்திரை குத்தப்படாத ஓர் அடிமை இனம் உண்டெனில் அது பெண்ணினம் மட்டுமே) இந்நூல் என்னை வரவேற்றது மிக ஆச்சரியமாக இருந்தது.

காஃப்டா, என்பது ஒரு சடங்கின் பெயர், இது பெண் பிள்ளைகளுக்கு செய்யும், ஒரு கொடூரமான சடங்கும் கூட. அதை மையப்படுத்தி எழுதப்பட்ட அருமையான நாவல். இந்த சடங்கு சம்பிரதாயம் நடக்கும் இடம் ஆப்பிரிக்கா கண்டத்தில் நடக்கிறது. பழங்குடி மக்கள், காடுகளிலும், மலைகளிலும் வாழ்கின்றனர். இவர்கள் பெண் பிள்ளைகளுக்கு குறிப்பிட்ட பருவத்தில் ஊரைக் கூட்டி பெரும் திருவிழாவாக கொண்டாடி, ஒயித்தா மாமிகள் என்ற பெண்களால் இந்த சடங்கினை செய்கிறார்கள். அப்படி ஒரு பெண் பிள்ளைக்கு செய்யும் சடங்கினை, எல்லா என்கிற பெண் பிள்ளை யாருக்கும் தெரியாமல் மறைந்திருந்து பார்க்கிறாள். அந்த கொடூரக் காட்சி அவளை உறங்க விடாமல் செய்கிறது. இந்த சடங்கு முடிந்த இரண்டொரு நாளில் ஒரு வயதான மூதாட்டி வந்து தட்டிக் கேட்கிறாள். அந்த கதாபாத்திரத்தை எழுத்தாளர் மிக நேர்த்தியாக கையாண்டுள்ளார். இந்த சடங்கினை அரசாங்கமே, சட்டம் போட்டு தடுக்கின்றனர். அதையும் அந்த மக்கள் திட்டம் போட்டு மறைத்து செய்கின்றனர். அதை தடுக்கும் அதிகாரிகளிலும் ஒரு சில அதிகாரிகள் கையூட்டு பெற்றுக் கொண்டு அந்த மக்களுக்கு துணை போகின்றனர்.

இந்த தகவல்களில் மூலமாக பல சுவாரசியமான செய்திகளை உள்ளடக்கி நாவல் பயணிக்கிறது.

நாவலின் தொடக்கத்தில் எல்லா எதைக் கண்டு பயந்தாளோ அதே கட்டம் தனக்கும் நிகழும் தருணத்தில் எவ்வாறு எதிர் கொள்கிறாள் என்பதை மிக விறுவிறுப்பாக சொல்லியிருக்கிறார் எழுத்தாளர்.

அதே போல இந்த சடங்கும், கலாச்சாரமும் பெண்களுக்குள் எவ்வாறு புகுத்தப்பட்டுள்ளது. அதில் அவர்களும் எந்த விதத்தில் பங்கு வகிக்கிறார்கள், ஒரு எல்லைக் கோட்டில் பெண்களின் கையறுநிலையையும் சிறப்பாக சொல்லிச் செல்கிறது இந்நாவல்.

எழுத்தாளர் செ. சிலம்பரசன் அவர்களுக்கு இது முதல் நாவல், இந்நாவலுக்காக பல தகவல்களைத் தேடி திரட்டியுள்ளார். முதல் நாவலே, பெண்ணியமும், விழிப்புணர்வும் மிகுந்த நாவலாக ஆரம்பித்துள்ளார். மிகச்சிறப்பு.
அவரின் அடுத்தடுத்த படைப்புகளுக்கு ஒரு எதிர்பார்ப்பைக் கூட்டியுள்ளது.

இந்த நூல் சகோதரர் தசரதன் அவர்களின் கலக்கல் ட்ரீம்ஸ் பதிப்பக வெளியீடாக வந்துள்ளது, கூடுதல் மகிழ்ச்சி.

இது அனைவரும் வாசிக்க வேண்டிய நாவல்.

மன அமைதி

ஜெஸிலா பானு

நம் மனம், துடுப்பில்லாத படகுபோல் நடுக்கடலில் சிக்கியதற்கு ஒத்தது.
வேலைக்குச் செல்லும் போது எதிர்கொள்ளும் போக்குவரத்து, மேலாளர் அவருக்கு இருக்கும் பிரச்சனையைச் சம்பந்தமே இல்லாமல் நம் தலையை உருட்டுவது, கணவன் – மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும்போது பலவிதமான வெளி மன அழுத்தத்தை வீட்டில் கொண்டு வந்து கொட்டுவது, இப்படி மன அமைதியின்மைக்குப் பல காரணங்கள் இருக்கலாம்.
சிறு குழந்தைகள் எதற்காக அழுகிறது என்று சமயங்களில் நமக்குப் புரிந்து கொள்ள முடியாதே, அதேபோல் சில நேரங்கள் என்னவென்றே புரியாமல் நமக்குக் கோபம் வரும், எரிந்து விழுவோம். ஏதோ ஒருவித எண்ணற்ற பாரம் குடி கொண்ட உணர்வு எழும். குழப்பமான மனநிலைக்குத் தள்ளப்படுவோம்.
“இன்னும் இவ்வளவு பணி இருக்கா முடிக்க?”, “ஏன் எதுவுமே சரியாக நடக்கவில்லை?”, “ஏன் இப்படி நடந்தது?” என்று சிந்திப்பதும், நண்பர் ஒரு சிறிய தவறு செய்தால் அதற்குப் பெரும் மனச்சோர்வு கொள்வதும், சின்ன விஷயமோ பெரிய விஷயமோ அதற்கு மீளவே முடியாது என்பதாகச் சோகம் சூழ்வது, என்று உணர்வுகளின் சிக்கல்களில் நாம் மாட்டிக் கொள்கிறோம்.
எது எதற்கோ திறன் வளர்க்கும் பயிற்சிக்குச் செல்கிறோம். அல்லது இணையத்தில் தேடி தேவையானவற்றைத் தெரிந்து கொள்கிறோம், கற்க முயற்சிக்கிறோம். அதுபோல் மன சுமைகளுக்கு இடையில் மன அமைதியை நிலைநிறுத்துவதும் நமக்குத் தேவையான திறமைதான். அது நம் மனதை நிம்மதி நிறைந்த ஓய்வுக்குக் கொண்டு செல்லும்.

அன்றாட வாழ்க்கை உதாரணங்கள்:

- மாலை நேரம், வீட்டிற்குப் போகும் போது: ஒரு கடுமையான நாளை கழித்த சோர்வில், வீட்டுக்கு நீங்கள் செல்கிறீர்கள். குழந்தைகள் வீட்டுப் பாடத்தில் உதவி கேட்டு நிற்கின்றனர். மனைவியும் உங்களிடம் தன் அலுவலக வேலை சுமை பற்றிப் பேசுகிறார். இதனால் உங்கள் மனதில் பதட்டமும் சலனமும் அதிகமாகிறது. அப்படியில்லாமல் இந்தப் பொழுதை நீங்கள் சீராக்க முயற்சி செய்யலாம். சில நிமிடங்கள் மூச்சை ஆழமாக இழுத்து விட்டு, கண்களை மூடி, "இதுவும் கடந்து போகும்" என்று மனதை நிம்மதியாக்கலாம். மூச்சு பயிற்சி மனதை சாந்தமாக்கும் ஒரு முக்கியப் பயிற்சி.
- அடர்த்தியான போக்குவரத்தில் நின்று கொண்டிருக்கும்போது: விரைவில் சென்று சேர வேண்டிய இடம் இருப்பினும், நெரிசல் காரணமாக நின்று கொண்டிருக்கிறீர்கள். மனதில் அன்றைய அழுத்தங்கள் அலைப்பாயும், வேலை பற்றிய சிந்தனைகள் மனதில் தடுமாறும். அந்த நேரத்தில் நம் சிதறிய எண்ணத்தில் கவனம் செலுத்தி. அது அன்றாட நிகழ்வுதானே என்று ஏற்றுக்கொண்டு, “இப்போது இது என்னுடைய நேரம், இதில் நமக்கு மகிழ்ச்சி தரும் செயலைப் பற்றி சிந்திப்போம்” என்று தன்னைத்தான் ஆற்படுத்துவதும் ஒருவித கலைதான்.

ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் நம்மை புரிந்து கொள்வதில் தாமதம் ஏற்படும் போது: அதனால் நம் மனதில் இன்னல் புகும், ஏதோ ஒரு வகையான சோர்வு உண்டாகும். ஆனால் “நான் அவர்களை மாற்ற முடியாது, ஆனால் என் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள முடியும்” என்று எண்ணுவது மிகவும் முக்கியம்.

மன அமைதிக்கான சில வழிகள்:
1. தன்னைக் கவனித்துக்கொள்ளுதல்
உங்கள் மனம் சோர்வு அடைந்தால், அதன் அடிப்படை காரணத்தை உணர்ந்து, அதிலிருந்து மீண்டுவிட்டாலே, அந்தச் சிந்தனையிலிருந்து விடுபட்டாலே பேருதவி. சிறிது நேரம் உங்களுக்குப் பிடித்த இசையைக் கேட்கலாம். அல்லது நீங்கள் விரும்பிய பொழுதுபோக்கில் மனம் கரையலாம். நூல் வாசிக்கும் பழக்கமிருந்தால் அதில் மூழ்கலாம். இது உங்கள் மனதிற்குச் சிறிய ஓய்வைப் பெற்றுத் தரும்.
2. அன்றாட நன்றி உணர்வு
சின்ன வெற்றி, ஒரு சிறு புன்னகை, அன்பான வார்த்தை போன்றவற்றுக்கு நன்றி கூறுங்கள். உதாரணமாக, காலை எழுந்ததும் “இன்று என் குடும்பம் ஆரோக்கியமாக இருக்கிறது” என்று நினைத்து மகிழுங்கள். காலை உணவு சுவையாக இருந்தால், பாராட்டி நன்றி தெரிவியுங்கள். இரவில் உறங்க செல்லும் முன் அன்று நடந்த நல்லவற்றை நினைத்து மன ஆறுதல் பெறுங்கள்.
3. எதிர்பார்ப்புகளைக் குறைத்தல்
“அவர்களிடமிருந்து முழுமையான புரிதலை எதிர்பார்க்கமாட்டேன்” என்று நினைத்தாலே போதும், மன சுமை குறையும். நீங்கள் செய்த உதவிக்குப் பிரதிபலம் எதிர்பார்க்காமல், உதவியாக இருந்தது குறித்து நினைத்தாலே மனம் மகிழும்.
4. நிம்மதியான மூச்சுப் பயிற்சி
சோர்வான, பதட்டமான நேரங்களில் மூச்சை ஆழமாக இழுத்து விட்டாலே. நிமிடங்களில் மனதில் அமைதி தரும்.
5. தியானம்
மதியம் சாப்பிட்ட பின், 5 நிமிடம் கண்களை மூடி அமைதியாக அமருங்கள். அன்றாட எளிய முயற்சி தான் நம் மனதை வலுப்படுத்தும்.
நிறைவாக…
நம் மன சுமைகள் ஒரு மாலை அசுவாசமோடு வீசும் காற்றுப்போல, அதுவும் தளர்ந்து போகும். ஆனால் அதற்கிடையில் நாம் மனதில் அமைதியைத் தாங்கிக்கொள்வது எப்படி என்று கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கையின் சவால்கள் மற்றும் சந்தோஷங்கள் எல்லாம் நமது மனதிற்குள் ஒரு சமநிலை உருவாக்கும் வரை பயிற்சி தொடர வேண்டும்.
“அமைதி என்பது வெளியில் காண்பது அல்ல, உள்ளே உணர்வது.”
நாம் நம் உள்ளார்ந்த அமைதியோடு வாழும் போது, வெளியுலகின் குழப்பங்களும் நமக்குப் பெரிதாய் தாக்காது. அந்த அமைதி தான் நம் மனதில் உண்மையான மகிழ்ச்சியையும், சோர்வு இல்லாத ஓய்வையும் கொடுக்கும்.

பாண்டியன் பொற்கிழி

கேலக்ஸி ஆரம்பித்து மூன்றாண்டுகள் நிறைவுற்றிருக்கும் இவ்வேளையில் அறுபது புத்தகங்களுக்கு மேல் வெளியிட்டு, பதிப்புத் துறையில் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கி வைத்துள்ளது.

புத்தகங்கள் வெளியிடுவதுடன் நின்று விடாமல் எழுத்தாளர்களுக்கு என்னால் ஆன ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என அதன் நிறுவனர் திரு. பாலாஜி பாலாஜி பாஸ்கரன் அவர்கள், கேலக்ஸியின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவில் 'பாண்டியன் பொற்கிழி' என்னும் விருதினை அறிமுகம் செய்தார்.

2023 பாண்டியன் பொற்கிழி விருது
எழுத்தாளர் பரிவை சே.குமார்

'எப்போதுமே மண் சார்ந்த, வட்டார வழக்கு எழுத்துக்கு மனிதர்களின் உணர்வுகளைக் கடத்தும் தன்மை உண்டு என்றும், அவ்வகை எழுத்து உயிர்ப்புடனும் மண்ணின் மணத்துடனும் இருக்கும் என்றும், அதன் காரணமாகவே அந்த எழுத்தாளர்களைக் கொண்டாடுவேன்' என்றும் அடிக்கடி சொல்லும் பதிப்பாளர் அவர்கள், அந்த எழுத்தையும் எழுத்தாளனையும் அவரால் முடிந்தளவுக்கு வெளி வட்டாரத்தில் அறிமுகம் செய்வதை மகிழ்வுடன் செய்து வருகிறார்.

மண் சார்ந்த எழுத்து எப்போதுமே அந்த மனிதர்களின் உணர்வுகளை வாழ்வியலோடு நம் கண் முன்னே காட்சிப்படுத்தும், அந்த எழுத்தாளர்களை நாம் கொண்டாடுவோம் என்றுதான் இவ்விருதை அறிமுகம் செய்து , ஜூன் மாதம் நடக்கும் கேலக்ஸியின் ஆண்டு விழாவில் கொடுப்பதை வழக்கமாக வைத்துள்ளார்.

அவர் மதுரை மண்ணின் மைந்தர் என்பதால் கேலக்ஸியின் எழுத்தாளரைப் போற்றும் விருதுக்கு 'பாண்டியன்' என வைத்து, மன்னர் கொடுக்கும் பரிசுகளில் 'பொற்கிழி' எப்போதும் கலைஞர்களுக்கு முக்கியமானதாக இருக்கும் என்பதால் அதையும் சேர்த்து 'பாண்டியன் பொற்கிழி' விருது என ஆக்கிவிட்டார்.

இந்த விருது பெறும் எழுத்தாளருக்கு கேடயமும் 10,000 ரூபாய் ரொக்கமும் வழங்கப்படுகிறது.

இந்த விருதை 2023-ல் எழுத்தாளர் பரிவை சே.குமார் அவர்களும், 2024-ல் எழுத்தாளர் ஆமினா முஹம்மத் அவர்களும் பெற்றிருக்கிறார்கள். இந்த வருடத்துக்கான (2025) விருது எழுத்தாளர் தெரிசை சிவா அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

-கேலக்ஸி குழுமம்

2024 பாண்டியன் பொற்கிழி விருது
எழுத்தாளர் ஆமினா முஹம்மத்

கேலக்ஸியைப் பொறுத்தவரை புத்தக வெளியீடு, புத்தக விற்பனை மற்றும் பாண்டியன் பொற்கிழி விருது என ஒரு வட்டத்துக்குள் நின்றுவிடாமல் 'கதைப்போமா..?' என்ற படித்ததைப் பகிரும் மாதாந்திரக் கூட்டம், வருடா வருடம் ஒரு உலகளாவிய போட்டி எனத் தனது சிறகை மேலும் மேலும் விரித்துப் பறப்பதில்தான் சந்தோசமே என்பதை உணர்ந்தே பயணிக்கிறது.

2023-ஆம் ஆண்டு கேலக்ஸியின் முதலாமாண்டு உலகளாவிய சிறுகதைப் போட்டி நடத்தப்பட்டது. இதில் விதிமுறைக்கு உட்பட்டு எழுதப்பட்ட 212 கதைகள் போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

அதில் முதல் பரிசை விஜி ரவி அவர்கள் எழுதிய 'அமிர்தத்துளி' என்னும் சிறுகதையும், இரண்டாம் பரிசை காயத்ரி.ஒய் அவர்கள் எழுதிய 'பூரணம்' என்னும் சிறுகதையும், மூன்றாம் பரிசை அனந்த் ரவி அவர்கள் எழுதிய 'காலங்கள் மாறும்' என்னும் சிறுகதையும் பெற்றன. மேலும் சிறப்புப் பரிசினை ஆர். இராஜசேகரன் அவர்களின் 'மனித யானை' மற்றும் படிப்பகத்தான் அவர்களின் 'சாதாரணன் சிவா' என்னும் கதைகள் பெற்றன.

2024-ஆம் ஆண்டு மறைந்த சகோதரர் அப்துல் அஹத் நினைவு உலகளாவிய முதலாமாண்டு குறுநாவல் போட்டி நடத்தப்பட்டது. அந்தப் போட்டிக்கு மொத்தம் 39 குறுநாவல்கள் வந்திருந்தன.

அதில் முதல் பரிசை 'தொன்ம அறம்' (துரை. அறிவழகன்), இரண்டாம் பரிசை 'மழை ஓய்ந்த பொழுது' (நிழலி), மூன்றாம் பரிசை 'வேலை நேரம்' (இரா.தங்கப்பாண்டியன்), ஆறுதல் பரிசை 'மக்கத்தப்பா' (எம்.எம்.தீன்), 'புல்சிற்பம்' (வசந்தா கோவிந்தராஜன்), சிறப்புப் பரிசை 'முழு நிலவின் முன்துணையே' ('அலை' யுவராஜன்), 'கொதிப்பதும் குளிர்வதும்' (அனந்த் ரவி), 'அன்பு விரயங்கள்' (பானுமதி கண்ணன்) ஆகிய குறுநாவல்கள் பெற்றன.

சிறுகதைப் போட்டியில் வென்ற கதைகளுடன் இறுதிப் போட்டிக்குத் தேர்வான கதைகளும் சேர்த்து 'தோப்பு' என்னும் சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. அதேபோல் குறுநாவல்களும் புத்தகமாக்கப்பட்டன.

இந்த வருடம் கேலக்ஸி தனது இரண்டாம் ஆண்டு உலகளாவிய சிறுகதைப் போட்டியை நடத்தியது. அதன் முடிவுகள் கேலக்ஸியின் நான்காம் ஆண்டு துவக்க விழாவில் அறிவிக்கப்பட்டது.

கேலக்ஸியின் “விண்மீன்”
காலாண்டு இதழ்
21, ஜூன் 2025, இதழ் - 1
ஆசிரியர் : பரிவை சே. குமார்
பதிப்பாசிரியர் : பாலாஜி பாஸ்கரன்
வடிவமைப்பு : சென் பாலன்
கேலக்ஸி பதிப்பக வெளியீடு
ISBN Number : 978-81-989182-5-3

கங்கணம்
- நூல் விமர்சனம்



கங்கணம்
பெருமாள் முருகன்
காலச்சுவடு
343 பக்கங்கள்.

பிலால் அலியார்
அமீரகம்

கங்கணம் என்ற சொல்லை நாம் நம் வாழ்வில் பலமுறை எதார்தமாக பயன்படுத்தினாலும் அதை தனி வார்த்தையாக தலைப்பில் கண்டவுடன் அர்த்தம் புரியவில்லை, ஆனால் முன்னுரையின் முதல் இரண்டு வரிகளில் அதன் அர்த்த்தை பெருமாள் முருகன் விளக்கியதும் எளிதாக புரித்தது..
திருவிழாக் காலங்களிலும், திருமணத்தின் போதும் கையில் கட்டும் மஞ்சள் கயிறுக்கு பெயர் தான் கங்கணம் என்பதும், நாம் ஒரு செயலை முடிப்பதற்காக அந்த நோக்கத்துடனே பயணிக்கும் போது நம்மை சுற்றியிருப்பவர்கள் கங்கணங்கட்டிக்கிட்டு திரியுறவன் மாதிரி திரியுறான் பாருன்னு சொல்வது இந்த வார்த்தையை மையப்படுத்தியே..
தன் பண்ணையில் பண்ணையம் பார்க்கும் குப்பனின் 17 வயது மகனுக்கு திருமணம் செய்து வைக்க ஐயாயிரம் ரூபாய் பணத்தை நிலத்தின் முதலாளி மாரிமுத்துவிடம் கேட்பதற்காக குப்பன் நடந்தும் சாகசங்களுடன் ஆரம்பமாகும் நாவலில், முப்பத்தைந்து வயதை எட்டியும் திருமணமாகாத, திருமணத்திற்கு பெண் அமையாத சம்சாரி மாரிமுத்துவின் கங்கணத்தை நோக்கி செல்கிறது நாவல்.
மேற்கு மாவட்டங்களின் நிலவுடமை சமூகத்தை அவர்களின் வாழ்வியல், வறட்டு சாதிய பெருமிதத்தை, நெருங்கிய உறவுகளுக்குள்ளேயே பொருளாதாரத்தை மையப்படுத்திய ஒரு படிநிலை போக்கை காலம் முழுவதும் ஒவ்வொரு வார்த்தையிலும், செயலிலும் கையாண்டு வருவதையும், நிலவுடமை சமூகத்திடம் அடிமையாய் இருக்கும் பண்ணையடிமை சமூகத்தின் அவலத்தையும் புனைவாக வெகு நேர்த்தியாக கடத்தியிருக்கிறார் பெருமாள் முருகன்.
நிலத்திற்கு சொந்தக்காரனாக, வயலையே கட்டிக்கொண்டு வாழ்ந்து வரும், பைக், டிராக்டர் என்று பொருளாதார அளவுகோல்களில் முண்ணனியில் இருக்கும்
மாரிமுத்துக்கு ஏன் முப்பத்தைந்து வயதாகியும் பெண் கிடைக்கவில்லை என்ற காரணங்களின் பிண்ணனியில் சாதியும், சாதியத்தை கட்டிக்கொண்டு அழுக்காக திரியும் மக்களின் எதிர்மறை சிந்தனைகளுமே காரணமாக இருக்கின்றன என்பதை தெளிவாக உணர முடிகிறது..
சாதிய படிநிலையில் கீழ்நிலையில் இருக்க வைக்கப்பட்ட நிலமற்ற விவசாய கூலிகள் திருமணத்திற்காக அதிகமான கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்ளாமல் அடிப்படையான ஆண்/பெண் இணையேற்பை மட்டுமே முன்னிலைப்படுத்துவதும், பணம், காசு வந்தவுடன் மனிதன் என்ற விலங்கினத்திற்கை உருவாகும் பைசா பெருமானமில்லாத பகட்டும், மதிப்புகளற்ற வார்த்தை விளையாட்டுகளும் எந்தளவிற்கு இயல்பான வாழ்வை விட்டு தள்ளி செல்ல வைக்கிறது என்பதை வாசகன் உணர முடிகிறது.

எல்லோரிடமும் ஆயுதங்கள் தயாரக இருக்கின்றன. வாய்க்கும் சந்தர்ப்பத்தில் அதை வன்மையாக பிரயோகிக்க யாரும் தவறுவதில்லை என்ற வரிகளின் மூலம் மனிதனின் நாவை மிகப்பெரிய ஆயுதமாக சித்தரிக்கும் அந்த இடம் வலிமையானது. ஆம் நாம் பயன்படுத்தும் ஒரு சிறு வார்த்தை கூட எதிரில் நிற்கும் மனிதனை நிலைகுலையச் செய்யும் என்பதை அறியாமலேயே பேசிக்கொண்டே இருக்கிறோம். நாவை கட்டுப்படுத்தும் வலிமையை பெற வேண்டுமென்றாலும் பேசிய நாவு நிற்க மறுத்து பேசிக்கொண்டே இருக்கிறது, பொழுதன்னிக்கும்
இங்கு ஒரு தனி மனிதனின் பெண் துணைக்கான தேடலில் சமூகம் தன் பங்காக விதிக்கும் போலி கட்டுப்பாடுகள் எல்லையற்று செல்வதுடன் அவன் வாழ்வையே கேள்விக்குறியாக்குவதும், அந்த சமூகத்தில் அம்மா, அப்பா, பாட்டி, அம்மாயி, நண்பன், சுற்றத்தார் என தனி மனிதனை தினந்தோறும் வார்த்தைகளால் மட்டுமே கட்டுப்படுத்தும் மோசமான மனிதர்களையே நாம் பெற்றிருக்கிறோம் என்பதை உணர முடிகிறது. அவமானங்களுடன் மட்டுமே ஒரு மனிதன் வாழ்ந்து வருவதை போன்ற துயரம் எவனுக்கும் வாய்க்க கூடாது, அந்தளவிற்கு ஒருவனை அவமானப்படுத்துவதில் வெற்றிபெறுவதையே குறிக்கோளாக கொண்டு இந்த சமூகம் குரூர புன்னகையுடன் நகர்கிறது.
புனைவின் நாயகனாக மாரிமுத்து தன்னுடைய இயல்பான குணத்தை, வாழ்வியலை இழந்து விட்டு சமூகத்திற்காக மட்டுமே வாழ ஆரம்பிக்கும் நிலையை வாசகன் உணரும் போது சமூகம் என்பது ஒரு கொடூர வன்னுணர்வு மைதானமாகவும், நாம் அதில் பந்தாடப்பட்டும் ஒரு பந்தாகவும் சுற்றி வருகறோம் என நம்மையறியாமலேயே அறிந்து கொள்ளும் நிலையை படைப்பு உருவாக்குகிறது..
ஊரெங்கும் இருக்கும் தானாவதி தாத்தாக்களும், ராமன்களும், செல்வராசுகளும், வாத்தியார்களுமே மாரிமுத்துக்களுக்கான பொய்யான வழிகாட்டிகளாக இருப்பதையும் நாம் இலகுவாக கண்டடைகிறோம். நிலம், நிலத்திற்கான சமூக மதிப்பீடுகள் இன்றுவரை உயர்ந்து நிற்பதில் கிராமங்களும், கிராமத்தின் அழிக்க இயலாத சாதியுமே முக்கிய பங்கு வகிக்கின்றன.
கங்கணத்தை கங்கணம் கட்டிக்கொண்டு வாசிப்பதில் சில வட்டார சொற்கள் எனக்கு வாசிக்கும் வேகத் தடைகளை உருவாக்கினாலும் மாரிமுத்துக்கு பொண்ணு அமஞ்சுச்சான்னு இருக்குற ஆவலின் உந்துததால் இலகுவாக கடக்க முடிந்தது...
சிறந்த வாசிப்பனுவத்தை கொடுத்தது, கங்கணம் ...

தோரணமும், மாக்கோலமும்

கமலா முரளி

மலையடிவாரத்தில் அமைந்திருந்தது மாத்தூர் கிராமம். தோப்புகளும் நெல்வயல்களும் அழகுக்கு அழகு சேர்க்கும் .அது அறுவடைக் காலம். மக்கள் சுறுசுறுப்புடன் நெற்பயிரைக் களத்தில் சேர்த்துக் கொண்டு இருந்தனர். பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது. அதனால், வீடுகளும் புதுக்கோலம் பெறத் துவங்கி இருந்தது. மன்னர் வீரகேசரிக்கு இதே தைப் பண்டிகை நாளில் தான் பட்டாபிஷேகம் நடந்தது.
அதனையும் சிறப்பாக கொண்டாடுவர் மக்கள்.

ஆட்டனத்தி, வீட்டில் எல்லா இடங்களையும் தூய்மைப் படுத்தி இருந்தாள். தேவையற்ற, கிழிந்த பொருட்களைப் பிரித்து வைத்தாள். அவள் மகள் திலகவதியும் அம்மாவுடன் தூய்மைப் பணியில் உதவி செய்தாள்.

கடந்த வருடம் தான் புது கூரை வேய்ந்திருந்ததால், புதிய கூரை எதுவும் போடவில்லை. தென்னங்குருத்துத் தோரணங்களைத் திலகா எடுத்துத் தர, வாசலிலும் முற்றத்திலும் கட்டினாள் ஆட்டனத்தி.

"நான் மாக்கோலம் போடட்டுமா ? "

"திலகா, சிந்தாமணி அத்தை வீட்டுக்குப் போய் மருதாணி இலைகள் எடுத்து வா ! எல்லோருக்கும் வேண்டும். அதனால், இக்கூடை நிறைய பறித்து வா ! நாளை கோலம் போடலாம் "
மருதாணி இலைகளுடன் திரும்பி வந்த திலகா கூடவே, சிந்தாமணி மாமி உடல்நலம் இன்றி இருப்பதைத் தெரிவித்தாள்.
"அடடா, பண்டிகையும் அதுவுமா சிந்தாமணிக்கு நோவா ?" என்று ஆட்டனத்தி அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் போதே, குட்டிப்பெண் கனகவல்லி அங்கே வந்தாள்.|

"வாம்மா, கனகம், அம்மாவுக்கு சொகமில்லயா ?"

"ஆமா அத்தை, அம்மா சோத்துக் கஞ்சி இருந்தாக் கேட்டாங்க.." கனகம்.

"அம்மாவுக்காடி ?"
"ஆமா அத்தை ! வைத்தியர் அய்யா மருந்து குடுத்து இருக்காரு. இதமா சோத்துக்கஞ்சி குடிக்கச் சொன்னாரு."

"கொஞ்சம் இரு, கனகம், இப்பத்தான் கஞ்சி வடிக்கப்போறேன். திலகாக்குட்டி, கனகத்துக்கு எதனா சாப்பிடக் குடு"

தின்பண்டம் வைத்திருக்கும் தூக்கில் இருந்து முறுக்கும் கடலை உருண்டையும் எடுத்துக் கனகத்தின் கையில் தந்தாள் திலகா.

திலகாவின் சிற்றன்னை, மருதாணி அரைக்கத் தலைப்பட்டாள். திலகா ஒரு குச்சியால், மருதாணி விழுதைத் தள்ளி விட விட, சிற்றன்னை ஆட்டுரலை சுற்ற, இடையே கேள்விகள் வேறு...
சித்தி, மருதாணி இலையோட கொஞ்சம் புளி வச்சுருக்கீங்களே ஏன் ?"

"நல்ல சிவப்பா பத்தும் அதுக்குத்தான். சில பேரு சுண்ணாம்பு பாக்கு கூட வைக்கிறாங்க. நான் புளி , கிராம்பு வச்சு அரைக்கிறன்" என்றாள் சித்தி.

ஆட்டனத்தி கஞ்சிக் கலையத்துடன் வந்தாள்.
"கனகம்..." என்றபடியே வந்தவள், "பண்டிகை வருது. எல்லாக் குட்டிப் பொண்ணுங்களும் குளிச்சு, தலை சீவி வனப்பா இருக்கையில... இதப்பாரு இவள..."

"திலகா, நீ போய் இந்தக் கஞ்சிய சிந்தாமணி கிட்டக் குடு. கூட இருந்து, பக்குவமா, பதமா எடுத்துக் குடு".

திலகா கஞ்சி எடுத்துப் போக, கனகத்தைக் குளிக்க வைத்து, வேறு புது உடுப்புகள் கொடுத்து, தலையைச் சீவிப் பொட்டு வைத்து அழகு படுத்தினாள் ஆட்டனத்தி.

சித்தி அரைத்துக் கொண்டிருந்த மருதாணியைக் குச்சி வைத்து தள்ளிக் கொடுக்க ஆரம்பித்தாள் கனகம்.

திலகாவும் திரும்பி விட குட்டிப் பெண்கள் இருவருக்கும் சாப்பாடு போட்டுக் கொடுத்தாள் ஆட்டனத்தி.

"அம்மா, கனகத்தோட அம்மா, கஞ்சி சாப்பிட்டு, மருந்தும் சாப்பிட்டு உறங்க
ஆரம்பிச்சுட்டாங்க"

குழந்தைகள் விளையாடிக் கொண்டு இருந்தனர்.
ஆட்டனத்தி, தானே சிந்தாமணி வீட்டுக்குப் போய் , அவர்கள் வீட்டையும் ஒழுங்கு படுத்தினாள்.

"பண்டிகை அன்னிக்கும் நா வரேன். இல்ல திலகா சித்தியை அனுப்பறேன். நல்லா சாப்பிட்டு, தெம்பா இரு ! "

"பண்டிகை அன்னிக்கி நடமாடினாப் போதும் .. அறுவடைத் திருவிழா, பட்டபிஷேக நாள் ... அப்போ சிரிச்சி நாலு பேரு கிட்ட பேசுற மாதிரி இருக்கணும். "

"நிச்சயமா, நல்லா ஆயிடும் சிந்தா... சிந்தனையே வேண்டாம்"

"அக்கம் பக்கத்தில உன்ன மாதிரி உறவு இருக்கும் போது என்ன கவலை..."

"சரி, நல்லா படுத்துத் தூங்கு ! உன் மகள் வந்ததும் அனுப்பு. எல்லாருக்கும் சாப்பாடு கொடுத்து விடரேன்"

"கனகம் அங்க தான் இருக்காளா ... ?"

"ஆமா, திலகாவோட பாண்டி ஆடிகிட்டு இருக்கா"

இரவு சாப்பாட்டுடன், அரைத்த மருதாணியும் போயிற்று... அவர்கள் வீட்டு ஆண்கள் வைத்துக் கொள்ள... கனகத்துக்கும், திலகாவுக்கும் ஆட்டனத்தி மருதாணி வைத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

எல்லோரும் மகிழ்வுற இருக்கத் தானே பண்டிகைகள் !

தோரணமும், மாக்கோலமும் மட்டுமல்ல... பாசமும் ,பரிவும்... பண்டிகையின் பெருமை!

காதல் பெருகட்டும்

> “ வாட்சப் மற்றும் பேஸ்புக்-ல் போஸ்ட் செய்தவனுக்குள் தனக்கும் O-ve ரத்தம்தானே என்று தோன்ற, நர்ஸிடம் சென்று விவரம் கூறினான். நன்றி கூறியவளாய் உடனே அவன் ரத்தம் வழங்க ஏற்பாடு செய்தாள்.



சி.சதீஷ்குமார்
தஞ்சாவூர்,
(அபுதாபி)

முகநூல் , வாட்ஸாப் , ட்விட்டர் போன்ற அனைத்துச் சமூக தளங்களிலும் காதலர்தினக் கொண்டாட்டங்கள் தொடர்பான தகவல்கள் நிரம்பி இருந்தன. தன்னை அறியாமல் புன்னகைத்துக் கொண்டே , புதிய தரவுகளை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். மனம் என்னவோ காதலர்தினம் என்ற ஒற்றை வார்த்தையில் சிக்கி நின்றது.

இத்தனை ஆண்டு ஆன பின்னும், காதல் இன்னும் உயிர்ப்பாக உள்ளுக்குள் இருப்பது ஆச்சர்யமாக இருந்தது. பள்ளிப்பருவத்தில் முளைவிட்ட முதல் காதல், அறியாத முகம் கண்டு வந்த தெரியாத காதல், பேருந்து பயணத்தின் போது பூத்த ஒற்றை ரோஜா சூடி வரும் சகவயது பெண்ணின் மீதான பெருங்காதல், தொடர்வண்டி பயணத்தின் போது தொடர்ந்த காதல், இரயில் பயணம் முடிந்த பின்னும் முடியாத பயணமாய் தொடர்ந்த காதல், உறவினர் சந்திப்பில் உதித்த காதல், கல்லூரி நாட்களில் கடந்து வந்த பருவ காதல், அலுவலக சந்திப்பினால் ஏற்பட்ட அலுக்காத காதல் என... சில பல நினைவுகள் பசுமரத்து ஆணி போல் மனசுக்குள்... ஆழமாய் அசை போட்டு கொண்டிருந்தான். 'இத்தனை காதல் ஒரு மனிதனுக்கு வருமா..?' என்ற கேள்வி அவனுக்குள் இருந்து கொண்டே இருந்தது.

ஒரு காரணமாக நீல நிற உடை அணிந்து கொண்டு, இன்று யாரிடம் எப்படி வாழ்த்து சொல்வது என்று மனதில் ஒத்திகை பார்த்தான். பரபரப்பாக கிளம்பியவன் பின் வாசலில் தடால் என்று சத்தம் கேட்டதும் அங்கு ஓடினான். நேற்று இருமிக் கொண்டிருந்தான் என்பதற்க்காக தண்ணீரில் துளசி இட்டு குடிக்க சொல்லலாம் என்று துளசி பறிக்கச் சென்ற பாட்டி கால் இடறி கீழே விழுந்து, தண்ணீர் குழாயில் தலை அடிபட்டு வலியால் துடித்தாள்.

அலுவலகத்துக்கு அரை நாள் விடுமுறை சொல்லிவிட்டு , ஆட்டோவில் பாட்டியை ஏற்றி கொண்டு மருத்துவமனையை நோக்கி சென்றான். மருத்துவர் சோதித்து பார்த்து, 'வயசான காலத்துல ஜாக்கிரதையா இருக்க சொல்ல கூடாதா..? அவங்கள ஏன் வேலை பாக்க விடுறீங்க..?' என்று கடிந்து கொண்டு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு கட்டு போட்டுவிட்டபடியே , ரத்தம் அதிகம் வந்ததால் உடல் அயற்சிக்கு குளுக்கோஸ் போட்டு இருப்பதாகவும் வெளியே காத்திருக்க கூறினார். தனக்காக உதவ போய் பாட்டி தன்னை வருத்தி கொண்டாள் என்று வருந்தி கொண்டிருந்தான். மருந்து வாங்கி வர சொல்ல... மருந்தக பிரிவில் மருந்துக்காக காத்து கொண்டு இருந்தான்.

கதறி அழுதபடி ஒரு தம்பதியினர் O-ve ரத்தம் ஒரு யூனிட் வெண்டும், உதவி செய்யுமாறு மருந்தக பிரிவில் கூறிக்கொண்டு இருந்தனர். தன பாட்டியை கவனித்து கொண்டு இருந்த நர்ஸ் அவர்களை ஆசுவாசப்படுத்தி தான் அவர்களுக்கு உதவுவதாக கூறினாள். அவன் பக்கம் வந்தவள் O-ve ரத்தம் கொஞ்சம் அரிதான குரூப், நீங்க கொஞ்சம் உங்க நட்பு வட்டாரத்திலோ அல்லது வாட்சப், பேஸ்புக்லயோ கோரிக்கை வைக்குமாறு கேட்டுக்கொண்டாள்.

வாட்சப் மற்றும் பேஸ்புக்-ல் போஸ்ட் செய்தவனுக்குள் தனக்கும் O-ve ரத்தம்தானே என்று தோன்ற, நர்ஸிடம் சென்று விவரம் கூறினான். நன்றி கூறியவளாய் உடனே அவன் ரத்தம் வழங்க ஏற்பாடு செய்தாள். இரத்தம் கொடுத்து முடித்தவன் பழச்சாறு குடிக்க வெளியே வந்தான். வழியில் அந்த குழந்தையின் தம்பதியினர் காலில் விழுந்து நன்றி சொல்ல முற்பட்டனர். அவர்களை தடுத்து தைரியமாக இருங்கள் என்று கூறியவனாய்.. வெளியில் இருந்த பழமுதிர் சோலையில் சாத்துக்குடி ஜூஸ் வாங்கிக் குடித்து கொண்டு இருந்தான்.

தூரத்தில் ஒரு முதியவர் ஓவ்வொருவராக ஏதோ கேட்டு வந்து கொண்டிருந்தார். இவன் அருகில் வந்தவர், 'தம்பி ரொம்ப பசிக்குது' என்றார். இவன் ஒரு பத்து ருபாய் நீட்டினான், பெரியவர் மறுத்து, சாப்பாடு பார்சல் மட்டும் வாங்கி கொடுக்குமாறு கூறினார். 'ஏன் பார்சல்..?' என்று கேட்டதற்கு நடக்க முடியாத மனைவி வீட்டில் இருப்பதாக கூறினார். அனுதாபப்பட்டவனாய் இரண்டு

பார்சல்களை வாங்கி கொடுத்து விட்டு மருத்துவமனை வந்து சேர்ந்தபோது, பாட்டி அவனை பார்த்து 'எங்கப்பா போனே..?' என்று கேட்டவாறே கிளம்ப ஆயத்தம் ஆனாள்.

இருவரும் கிளம்ப எத்தனிக்கும் போது , சற்று தூரத்தில் இருந்த நர்ஸ் , 'எக்ஸ்க்யூஸ் மீ புளூ ஷர்ட்' என்று கூப்பிட, 'நானா...' என்பது போல திரும்பி பார்த்தான். 'ஆமாம் உங்களை தான்' என்று கூற , 'இரு பாட்டி வந்திறேன்' என்று நர்ஸ் அருகில் சென்று என்ன விபரம் என்று கேட்டான்.

'ரிப்போர்ட் எல்லாம் வாங்காம போறீங்க..?' என்றவளிடம் 'அடக் கடவுளே மறந்துட்டேங்க... நல்லவேளை ஞாபகப்படுத்துனீங்க' என்றபடி வாங்கிக் கொண்டு, தாங்க்ஸ் என்று கூறி நகர்ந்தவனிடம், 'என்ன சார் இன்னைக்கு புளூ ஷர்ட்... காதலர் தின ஸ்பெஷல் ஏதும் உண்டோ..?' எனக் கிண்டலாகக் கேட்டுவிட்டு, 'ரத்தம் கொடுத்து உதவியதற்கு நன்றி' என்று கைகுலுக்கினாள் நர்ஸ்.

அந்த ஒரு நொடி மருத்துவமனை மலர்த்தோட்டமாக மாறியது அவனுக்கு. நர்ஸ் நிலவென மாறினாள். அந்த ரம்மியமான சூழல், 'ஓகே சார் தேங்க்ஸ்' என்ற நர்சின் குரலும் , 'போலாமாடா' என்ற பாட்டியின் குரலும் ஒரு சேர மாற்றி அமைத்தது. ஒருவேளை மருத்துவ முத்தம், கட்டிப்பிடி வைத்தியம் எல்லாம் உண்மைதானா என்று தோன்றியது அவனுக்கு. பாட்டியும் அவனும் டாக்ஸியில் திரும்பிக் கொண்டிருந்தனர். அதில் வேலன்டைண்ஸ் தின சிறப்பு தொலைபேசி நிகழ்ச்சி ஒன்று எப்.எம். வழி ஒலித்து கொண்டிருந்ததது.

விளம்பர இடைவேளைக்குப் பிறகு பேசிய நேயர் ஒருவர், 'சார் காதல் என்றாலே ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் மட்டுமே உண்டான மோகம்ன்னு தப்பா நினைக்கிறாங்க சார். அது இல்ல. காதலுக்கு பல பரிமாணம் இருக்கு, அன்பு, பாசம், நேசம், உதவி. உதாரணத்திற்கு பசிக்கு சாப்பாடு வாங்கித்தர துடிக்கும் மனசு, உயிர் பிழைக்க சற்றும் யோசிக்காம உதவுற மனசு, முன்ன பின்ன அறிமுகம் இல்லாத நபர்களிடம் நாம் காட்டும் கனிவு, உறவுகளிடம் நாம் காட்டும் பாசம் என எல்லாத்துக்கும் பின்னாடி இருக்கிறது காதல் தான் சார். அதுக்கு பேரு உதவி, நேசம், அன்பு, பாசம்... இது எல்லாமே காதலன்னு நினைக்கிறது சிறுபிள்ளைத்தனம்... காதல் பெருகட்டும், மனிதம் தளரட்டும்' என்று கூறி தான் ஒரு நர்ஸ் ஆக வேளை பார்ப்பதாக பேசி முடித்தார். நிகழ்ச்சித் தொகுப்பாளர், 'புனிதமான வேலை பார்க்கும் நர்ஸ் நீங்க... ரொம்ப அருமையா பேசினீங்க, நேயர்களே... காதல்ன்னா ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் மட்டுமே உண்டான மோகம்ன்னு தப்பா நினைக்கிறாங்க. அது இல்ல. காதலுக்கு பல பரிமாணம் இருக்கு, அன்பு, பாசம், நேசம், உதவி.. இப்படி நிறைய .. ஆதலால் அனைவரையும் காதல் செய்வீர் .. காதல் பெருகட்டும், மனிதம் தளரட்டும்.. நம்ம நர்ஸ்க்காக இந்தச் சிறப்பு பாடல்' என்று கூறி நிறுத்திய அந்த சிறிய நொடிப்பொழுதில் இவன் மனதில் விண்ணில் காணும் பவுர்ணமி நிலவாக மருத்துவமனையில் கண்ட நர்ஸ் தோன்றினாள் . இவன் காற்றில் அசையும் மரமாக உணர்ந்தான்.

"காதலின் தீபம் ஒன்று..... ஏற்றினாளே என் நெஞ்சில்" என்ற பாடல் ரம்மியமாக ஒலித்து, டாக்ஸிக்குள் நிறைந்தது... அவன் மனசுக்குள்ளும்.

மூன்றாம் பாலினம்

இத்ரீஸ் யாக்கூப்
அலைன் – அமீரகம்

சமீபத்தில் பெங்களூரு செல்ல, சேலத்திலிருந்து புறப்படும் பேருந்தில் அமர்ந்திருந்த போது, அனுஷ்காவை ஒத்த வாளிப்பான உடலழகோடு பேருந்தினுள் கைகளைத் தட்டியவாறு நுழைந்தாள் அந்த திருநங்கை தேவதை! கூந்தல் மணக்கும் மல்லிகை, லாவகமாய், லோ ஹிப்பில் சொறுகப்பட்ட சிப்பான் சேலை மற்றும் பரோட்டோவிற்கு எண்ணெய் விட்டு நன்றாகப் பிசைந்து இன்னும் உருண்டையாக கிள்ளி, விசிறாமல் மூடியும் மூடாமலும் வைக்கப்பட்ட வளவளப்பான மைதா போன்றிருந்த வயிறு, இடுப்பின் பின்புறம் அச்சிடப்பட்ட அழகான டிராகன் டாட்டூவென, ஒவ்வொன்றும் காண்பவரை கிறங்கடித்தது அவளது சிங்காரம்.
வழக்கம்போல, அங்கேயும் சில பதின்ம மாணவர்கள், 'டேய் அது அவ இல்லடா, அவன்டா...' வயதுக்குரிய குறும்போடு சற்று சத்தமாகவே தமக்குள் பேசிக்கொண்டு, அவளைப் பார்த்து பார்த்து சிரிப்பதும், தலையை குனிந்துக் கொள்வதுமாய் சட்டென வந்த மின்னலால் குதூகலமடைந்தவர்கள், அந்த நங்கை அவர்களை நோக்கி வருவதைக் கண்டு, செயற்கையாய் தங்கள் முகங்களை ஜன்னலுக்கு வெளியே வேடிக்கைப் பார்ப்பது போல் பாவனை செய்தனர்.
அருகில் வந்து கைத்தட்டி "காசு கொடு!" என்று கேட்டாள் அந்த சிவப்பழகி. அவர்கள் முன்வராதவர்களாய் அவளைப் பார்த்து சன்னமாய் புன்னகைக்க, "கிண்டல் மட்டும் பண்ற, காசு தர மாட்டியா...?" என்று சிணுங்கியபடி தோளைச் சிலுப்பி கொண்டு கடந்து சென்றுவிட்டாள். குற்ற உணர்வில் கொஞ்சம் இரக்கப்பட்டவர்களாய், பேருந்தைவிட்டு கீழிறங்கி பக்கவாட்டில் சென்று கொண்டிருந்தவளிடம் ஜன்னல் வழி காசை நீட்டினார்கள். "கேட்டபோது குடுக்கல... இப்ப குடுக்குற? வேணாம் போ!" வெண்கல குரலில் மறுத்துவிட்டு வேறு பஸ்ஸில் ஏறத் துவங்கினாள்.
'ஏன் இப்படி பிச்சையெடுத்து வாழ்கிறார்கள், நல்லாத்தானே இருக்கிறார்கள், எங்கேயாவது வேலைக்கு செல்லலாமே...' என்ற மனதிடம், 'வந்தவளைக் கண்டதும் நீயும்தான் ஒதுங்கி கொண்டாய், தோளை தட்டியும் நீ திரும்பவே இல்லை! உன்னை போல்தானே மற்றவர்களும் இவள் போன்றவர்களை எதிர்கொள்வார்கள்...'என்ற கேள்விக்கு மௌனமே முடிவாய் இருந்தது.
சாக்ஷி, சமீபத்தில் ஆணிலிருந்து பெண்ணாக தன்னை மாற்றிக் கொண்ட பாடகர் அல்லது பாடகி. இயற்பெயர் ஹரி. இவரும் ஸ்டான்லி என்பவரும் 'Stari Duo' எனும் பெயரில் இணைந்து பாடி, வெளியிட்ட வீடியோக்கள் யூ-ட்யூபில் பிரபலம். இவர்களது சிறப்பம்சம் ஆண், பெண் என இரு குரல்களிலும் இருவரும் பிரமாதமாக பாடி அசத்துவார்கள். இந்த ஜோடி இப்போது ஒரு தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலமாக, இன்னும் பிரபலமான நிலையில், வெவ்வேறு யூ-ட்யூப் சேனல்கள் இவர்களைப் பேட்டி எடுத்து வெளியிட்டுள்ளன. அதில் ஒன்றில், தனது சில ஆண்டு போராட்டத்தை விட ஒரு நாள், தான் ஒரு திருநங்கை கூட்டத்தினரிடம் சிக்கிக்கொண்டது மிகவும் வருத்தமளிக்கச் செய்ததென்றும், அவர்கள் பணம் கேட்டு தொந்தரவு செய்ததாகவும், முக்கியமாக அவர் எழுப்பும் அந்த கைத்தட்டலை, தான் வினோதமாக பார்த்ததாகவும் கூறியிருந்தார். மேலும், ஏன் இவர்கள் பிச்சை எடுக்கிறார்கள்? இதற்கு ஒரு பூக்கடை வைத்தாவது கௌரவமாக பிழைக்கலாமே என்று ஆதங்கப்பட்டிருந்தார்.

> அருகில் வந்து கைத்தட்டி "காசு கொடு!" என்று கேட்டாள் அந்த சிவப்பழகி. அவர்கள் முன்வராதவர்களாய் அவளைப் பார்த்து சன்னமாய் புன்னகைக்க, "கிண்டல் மட்டும் பண்ற, காசு தர மாட்டியா...?" என்று சிணுங்கியபடி தோளைச் சிலுப்பி கொண்டு கடந்து சென்றுவிட்டாள்.

தொண்ணூறுகளின் மத்தியிலிருந்து பத்திரிக்கைகளில் பிரபலமாக உலா வந்தவர்களில் பிரியா பாபு முக்கியமானவர். இவரும் ஆணாக பிறந்து பெண்ணாக தன்னை மாற்றிக் கொண்டவர்தான். கிட்டத்தட்ட இப்போதிருக்கும் பல திருநங்கைகளுக்கு ஒரு முன்னோடி எனலாம்! போராட்டம், காதல், திருமணம், சமூகப்பணி என்று பலவகையில் மற்ற திருநங்கைக்கு நம்பிக்கையாக இருந்தவர், இப்போதும் களத்தில் நல்ல பல முயற்சிகளை மேற்கொண்டு, ஒரு செயற்பாட்டாளராக, எழுத்தாளராக, ஆவணப்பட இயக்குனராக, பேச்சாளாராக முடிந்தவரை மாற்றுப் பாலினத்தவருக்கு தன்னை ஒரு வழிக்காட்டியாகவே அர்பணித்து வருகிறார்! மாற்றுப் பாலினத்தவரின் படைப்புகளை வெளியிட, பேச டிரான்ஸ் பதிப்பகம் மற்றும் டிரான்ஸ் மீடியா போன்றவற்றையும் நிர்வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.
சரி, இந்த திருநங்கைகள் எவ்வாறு உருவாகிறார் என்று பார்க்குபோது இரண்டு வகையில் அடங்குகிறார்கள். ஒன்று மரபியல் ரீதியாக, இவர்களை சரி செய்ய முடியுமா எனத் தெரியவில்லை. இவர்கள் இயற்கையிலேயே மூன்றாம் பாலினமாக கருதப்படுகிறார்கள். இன்னொன்று மன ரீதியாக, மனரீதியாக பாதிக்கப்பட்டவரை, பாதிக்கப்படுபவரை நிச்சயம் கவுன்சிலிங் மூலம் குணப்படுத்த முடியுமென்றே தோன்றுகிறது. இவர்கள் அங்க அமைப்பின்படி வாழ மனரீதியான மாற்றங்களே தீர்வாக அமையும்.

சிந்திக்கும் விதத்தை மாற்றிக்கொள்வதன் மூலம் ஹார்மோன் பிரச்சனைகளும் இயல்பு நிலைக்குத் திரும்பலாம். அதில் தோற்பவர்தான், பிறரால் ஒதுக்கப்படும் நிலைக்கு உள்ளாகிறார்கள். தனிமைப்படுத்தலின் விளைவு அடுத்த நிலையான பால்மாற்ற அறுவை சிகிச்சைக்கு உந்தச் செய்கிறது. பிரியா பாபு அதைதான் செய்தார் என நினைக்கிறேன். சாக்ஷியின் நிலை தெரியவில்லை.
மனரீதியான போராட்டங்களோடு, தனது நிலையை மறைத்துக் கொண்டு அல்லது மாற்ற முயற்சி செய்துகொண்டும் வாழ முடியும் என்பதற்கு நான் கண்ட இருவரை உதாரணங்களாய் முன் வைக்கிறேன்.

ஒருவர், திருச்சேறையில் நான் படித்துக்கொண்டிருந்த போது, பக்கத்து ஊரான நாச்சியார் கோயிலிருந்து வந்து முருகன் டீ ஸ்டாலில் (உணவகத்தில்) சமையல்காரராக பணி புரிந்துக்கொண்டிருந்தார். பார்க்க மிகவும் நளினமாக பெண்ணை ஒத்து இருப்பார். நடுவாகும் எடுத்திருப்பார். பாவனைகள் எல்லாம் பெண்களையே நினைவூட்டும். ஆனால் அவர் ஆணாகத்தான் வாழ்க்கை நடத்தினார். குடும்பம், குழந்தைகள் என எல்லாமும் உண்டு.

இன்னொருவர், அது 21ஆம் நூற்றாண்டு பிறந்த சமயம், எங்கள் ஊர் பிள்ளையார் கோயிலில் திருவிழா நடந்துக்கொண்டிருக்கிறது. கரகாட்டத்தை நண்பர்களோடு வெகுவாய் ரசித்துக் கொண்டிருக்கிறேன். அங்கே சிலர், கரகாட்டம் ஆடுபவர்களில் ஒருவரை மட்டும் கேலியாய் சீண்டிக் கொண்டே இருந்தனர்.
அந்த பெண்ணும் சிரித்தபடியே ஆடிக்கொண்டிருந்தாள். ஆனால் அவர் பெண்ணல்ல, ஆண் என்பது கரகாட்டம் முடிந்த பின்னரே தெரிந்தது. பரியேறும் பெருமாள் படத்தில் வரும் அந்த அப்பா கதாபாத்திரம் போலதான் அவரது வாழ்க்கை! பாலியல் ரீதியாகவும் அவர் துன்புறுத்தப்பட்டதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கரகாட்டம் போக மற்ற நாட்களில் சித்தாள் வேலைப் பார்த்து வந்தார். கடின உழைப்பாளியாக இருந்தாலும், அந்த இறுகிய உடலையும் கிறி சுவைக்கும் மிருகங்களும் இருந்தே வந்தன.
அவருக்கு மனைவி பிள்ளைகள் இருந்ததை மற்றவர்கள் கேலி செய்தும், கேள்வி கேட்டும் பார்த்திருக்கிறேன். ஆனாலும் அவர் இன்று வரை ஆணாகவே தன் வாழ்க்கையை நடத்துகிறார்.

ஒரு இஸ்லாமியன் என்ற பார்வையில் இந்த மூன்றாம் பாலினம் உண்மையிலேயே இருக்கிறதா என்று மார்க்க ரீதியாக ஆராய்ந்த போது, இஸ்லாமிய தலைவர்களில் ஒருவரான பி.ஜெயினுலாபிதீனின் கேள்வி பதில் ஒன்றில் கிடைக்கப்பெற்ற பதில் யாதெனில், இறைவனின் படைப்பின் படி ஆண், பெண் என்ற இரு பாலினமே உண்டென்றும். ஆண் பெண் போலவும், பெண் ஆண் போலவும் அலங்கரித்து கொள்வது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டதென கருத்துக்களை முன் வைக்கிறார். மேலும் உருவத்தால் எந்த பாலினத்தை ஒத்து இருக்கிறாரோ, மனரீதியில் வேறுபட்டிருந்தாலும், அதையே சார்ந்திருக்க வேண்டுமென அறிவுறுத்துகிறார். இது சாத்தியமா?
மனரீதியான தாக்கங்களுக்கு வசிக்கும் சூழல்களே காரணிகளாய் அமைகின்றன. பெண்களுக்கே உரிய சம்பிரதாய வேலைகளை ஆண்கள் செய்ய பழகும்போதும், அவர்களோடு அவர்களாக கலக்கும்போது, இது நிகழ வாய்ப்புகள் அதிகம். உதாரணமாக தாய், சகோதரிகளின் பாதிப்பில் தன்னை மறந்து, தன்னையும் ஒரு பெண்ணைப் போலவே பாவித்து கொண்டு செய்யும் செயல்களால் இது போன்ற (விபரீதங்கள்?) மாற்றங்கள் நடக்கலாம். இது மற்ற ஆண்களை கவரும் வேலைகளிலும் போய் முடியலாம். அவர்களும் இந்த சீரழிவிற்கு ஒரு கருவியாய் மாறிப்போகலாம், அல்லது சீரழிக்க முற்படலாம்.
பொழுதுபோக்கு அல்லது விருப்பங்களின் தேர்வுகள் மூலமாகவும் அப்படியொரு சூழல் நிகழ சாத்தியம்தான். உதாரணமாக கமல் ஹாசனின் இளமைக்காலத்தை சொல்லலாம். அவருடைய அதீத பரதநாட்டிய ஈடுபாட்டால், உடல்மொழியில் நிறைய நளினம் குடி கொண்டுவிட்டது. அதை அப்படியே விட்டுவிடாமல், கடுமையான உடற்பயிற்சிகள் மூலம் சரி செய்து கொண்டதாய் பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

> “போராட்டங்கள், இழப்புகள், ஏமாற்றங்கள் நிறைந்தது இவர்களின் இந்த மூன்றாம் பாலினத் தேர்வு. வரும் நாட்களில் இவர்களது கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஒருவேளை இவர்களின் நிலையை உயர்த்தலாம்.

பின்நாளில் காதல் இளவரசனாய் தன்னை முன்னிறுத்தி கொள்ள முயன்றது, அந்த நிர்பந்தத்தின் விளைவாக கூட இருக்கலாம்
.
கமலுக்கு மாற்றத்திற்கான வழி தெரிந்தது செய்தார், தெரியாதவர்கள் என்ன செய்வார்கள்? இந்த மாதிரி மனரீதியான போராட்டங்கள் பதின்ம வயதுகளில்தான் பெரும்பாலும் துவங்குகின்றன. பாலின மாற்றத்திற்கு உட்படுத்திக்கொண்டவரின் கூற்றுகளின் பிரகாரம், பெண் போல் அலங்காரம் செய்வதிலிருந்து தொடங்குகிறதாம் எல்லாம். இது தவறான உறவுகளில் முடிவது இன்னும் சோகம்!
இதை கண்டுபிடித்து, அவர்களது எதிர்காலத்திற்கு ஆதரவாக பக்குவமாக எடுத்து பேசி, பெற்றோர்கள் மற்றும் உடன்பிறந்தோர்கள் சரி செய்ய முயற்சிப்பதின் மூலம், ஆரம்ப நிலைகளிலேயே அவர்களை சீர்திருத்தி, கட்டுக்குள் கொண்டு வரலாம்.
கண்டுகொள்ளாமல் விட்டாலோ, கடின போக்கை கையாண்டாலோ, அவர்கள் இன்னும் அதில் தீவிரமாக வாய்ப்புகள் அதிகம். கைமீறி போய்விடுவார்கள். அப்புறம் வீட்டை விட்டு வெளியேறிய ராஜா, ராணியாகத்தான் திரும்பி வருவார் அல்லது திரும்பவே மாட்டார். அப்படி புறகணிக்கப்பட்டு, மாறியவர்களும் இது போன்ற பதுமைகளில் அடங்குவார்கள்! இருப்பினும் எல்லாமே அவரர் தெரிவு; தனி மனித விருப்பங்களில் தனது அடக்குமுறைகளை நுழைக்க இங்கே யாருக்கும் உரிமை இல்லைதான்.
போராட்டங்கள், இழப்புகள், ஏமாற்றங்கள் நிறைந்தது இவர்களின் இந்த மூன்றாம் பாலினத் தேர்வு. வரும் நாட்களில் இவர்களது கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஒருவேளை இவர்களின் நிலையை உயர்த்தலாம். இதுவரை முடியாதிருந்த, ஓரின சேர்க்கையாளர்கள், திருநங்கைகள் குழந்தை பெற்று கொள்ளும் சாத்தியக்கூறுகள் பற்றி மேற்கொண்ட ஆராய்ச்சிகள் இப்போது வெற்றியடைய வாய்ப்புள்ளதாம் (பாதி நிரம்பிய கோப்பை எனும் நூலில், ஆசிரியர் ஸ்ரீதர் சுப்ரமணியம் விவரித்திருக்கிறார்!) இது எங்கு போய் முடியுமோ! நடிகை மனோரமா ஒரு படத்திலாவது தான் திருநங்கையாக நடித்துவிட வேண்டுமென கடைசி வரை விரும்பினார், நிறைவேறவில்லை!
அரசு மாற்றுப்பாலினத்தவருக்காக வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு அறிவித்திருந்தாலும், தனியார் நிறுவனங்களில் அது எந்த அளவில் கடைபிடிக்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

சிந்தனைகள் கூண்டுக்குள்ளே

நூர் பாத்திமா, ஷார்ஜா, அமீரகம்

மனிதன் சிந்தித்து தான் செயல்பட வேண்டும். சிந்தித்து தான் முடிவு செய்ய வேண்டும். இன்றைய சிந்தனைகள் தான் நாளைய செயல்களாகவும், மிகப்பெரிய மாற்றமாகவும் மாறுகின்றன.

மனிதனுக்கும் இயந்திரத்திற்கும் உள்ள மிக முக்கியமான வேறுபாடே சிந்திக்கும் திறன் தான். மனிதனின் சிந்தனைகள் தான் அவனை மிகச்சிறந்த படைப்பாளியாகவும், வியாபாரியாகவும், எழுத்தாளனாகவும், கவிஞனாகவும் மாற்றுகின்றன. ஆனால், இன்றுள்ள AI உலகம் மனிதனை சிந்திப்பதிலிருந்து தடுக்கிறது. முக்கால் கணக்கு அரைக்கால் கணக்கெல்லாம் மனதிலே போட்ட காலம் சென்று இன்று எதற்கெடுத்தாலும் கைப்பேசியை பார்க்கும் நிலைக்கு வந்துவிட்டோம். ஒன்னும் ஒன்னும் இரண்டு என்பது தெரிந்தால் கூட கைப்பேசியின் கால்குலேட்டர் சொன்னால் தான் நம்புவோம் என்ற நிலையில் இன்று பலர்.

எண்ணற்ற தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இன்று நம் கண்முன்னரே இருந்தாலும் மனிதர்களில் பெரும்பாலானோர் மன அழுத்தத்தில் உள்ளார்கள் என்று சொல்கிறது கணக்கெடுப்பு.

மனிதன் சிந்தித்து தான் செயல்பட வேண்டும். சிந்தித்து தான் முடிவு செய்ய வேண்டும். இன்றைய சிந்தனைகள் தான் நாளைய செயல்களாகவும், மிகப்பெரிய மாற்றமாகவும் மாறுகின்றன.
சிந்தனைகளை சரியாக செய்வதற்கு நாம் என்ன செய்யலாம்

1. உலகில் இரைச்சல் அதிகமாகிவிட்டது, மனதிலும் தான். மனம் தேவையோ தேவை இல்லையோ பல ஆயிரக்கணக்கான சிந்தனைகள் மனதில் வந்து செல்கின்றன. இவையனைத்தையும் நிறுத்தி வைத்துவிட்டு ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து மூச்சினை கவனிக்கலாம்.

மூச்சு மட்டும் தான் நாம் உலகில் இருப்பதற்கான இருப்பினை உறுதி செய்கிறது. நம்மில் உள்ள உள்ளுறுப்புகளையெல்லாம் இயங்கவைக்கும் மூச்சினை சிறிது நேரம் (15 நிமிடங்கள்) கவனிக்கும் போது, மனம் சற்று அமைதிப்படும். அமைதியான மனதினில் தான் தெளிவான சிந்தனகள் உண்டாகும்.

2. கேள்விகள் கேளுங்கள் : கேள்விகள் நமக்குள் நாமே கேட்க வேண்டும். உலகத்தில் இத்தனை பேர் இருக்கும் எனக்கு மட்டும் ஏன்டா இப்படி நடக்குது என்ற சிந்தனை இருந்தால் அது எதிர்மறை. அதனால் உங்களுக்கும் உங்களை சுற்றி உள்ளவர்களுக்கும் நன்மை இருக்காது. அப்படி அல்லாமல், இந்த சூழ்நிலை எனக்கு என்ன பாடம் கற்பிக்கிறது..? நான் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும்..? என்று நினைக்கும் போது ஒட்டுமொத்த சூழ்நிலையும் உங்களுக்கானதாக மாறிவிடும்.

3. 5 நிமிட விதி : ஏதோ ஒரு எண்ணம் அல்லது ஒரு ரீல்ஸ் உங்களை, நீங்கள் செய்ய வேண்டிய முக்கியமான வேலைகளை பாதிப்பமாக உணர்ந்தால். உடனடியாக 5,4,3,2,1 என்று ஆழ்ந்த மூச்சிற்கு பின் எண்ணிவிட்டு உடனே அந்த வேலையினை தொடங்கி விடுங்கள். இதனால் தள்ளிப் போடும் பழக்கம் குறையும்.

4. கைப்பேசியை அணைத்துவிடுங்கள்: கைப்பேசியினை அமைதியாக்கிவிட்டு உங்கள் பணியினை தொடருங்கள்.

எண்ணங்களிலும் சிந்தனைகளிலும் தொடந்து கவனம் செலுத்தினால் வாழ்வு செழிப்பாகும்.

கன்னத்தில் முத்தமிட்டாள்...

பிரேம ராகவி

"இன்னும் எவ்வளோ நேரம் ஆகும்? சீக்கிரம் லக்ஷ்மியை கண்ணுல காட்டுங்க. அப்படியே அவ கண்ணுக்கு மை கொஞ்சம் அதிகமா போடுங்க. அது அவளுக்கு இன்னும் அழகா இருக்கும்" என்றேன் லக்ஷ்மி இருக்கும் அறை கதவை தட்டியபடி. நான் சொன்னதற்கு உள்ளே ஒரே சிரிப்பு சத்தம்.

"மாப்பிள்ளை சார், பொண்ண நாங்க தயார் பண்ணதும் கூட்டிட்டு வரோம். மணமகன் அறைல போய் உக்காருங்க" என்று உஷா சொல்ல, உள்ளே மீண்டும் சிரிப்பு சத்தம். அவர்களையெல்லாம் "சிரிக்காதீங்கடீ" என்று லக்ஷ்மி செல்லமாக அதட்டும் குரல் கேட்டது.

என் லக்ஷ்மி. எப்போதும் என்னை விட்டுக் கொடுக்காத என் லக்ஷ்மி.

நான் கீழே சென்றேன். வீடு முழுவதும் உறவினர்கள், நண்பர்கள். இத்தனை பேர் என்னை சூழ்ந்திருந்த போதிலும் லக்ஷ்மியையே என் விழிகள் தேடியது. அதிலும் அவளுக்கென்று நான் பல கடைகள் ஏறி இறங்கி தேர்ந்தெடுத்த மயில் நீல பட்டுப் புடவையில் எப்படி இருப்பாள் என்று காண ஆவல் கூடியது. குறைந்தது ஆயிரம் முறையாவது அந்த புடவையில் அவளை எண்ணிப் பார்த்திருப்பேன். ஒவ்வொரு முறையும் அவளின் அழகு முன்பை விட அதிகமாகவே இருந்தது. நான் அவளைப் பற்றி நினைக்கும்போதே அவளும் கீழே வந்தாள்.

என்ன?! என் லக்ஷ்மியை இவ்வளவு தான் எனக்கு தெரியுமா? நான் நினைத்ததை விட நூறு மடங்கு.. இல்லை, இல்லை.. ஆயிரம் மடங்கு அழகாக இருந்தாள்.

"ரவி தாத்தா. ரொம்ப வழியிறீங்க. தொடச்சுக்கோங்க" என்று என்னிடம் வாண்டுகள் சொல்லிவிட்டு ஓடினர்.

அடி படவா! இந்த காலத்து பிள்ளைகள்!!

என்ன அப்படி பார்க்கிறீர்கள்?!

ஆமாம். நான் தாத்தா தான். எனக்கும் லட்சுமிக்கும் இன்று சதாபிஷேகம், எண்பதாம் திருமணம். எத்தனை வருடங்கள் ஆனாலும் அவள் என் லக்ஷ்மி தானே. ஆயிரம் பிறைகள் நான் கண்டபோதும், என் வாழ்க்கையை பரிபூரணமாக்கியது இந்த பௌர்ணமி நிலவு தானே. அவளை நான் ரசிக்காமல் வேறு யார் ரசிக்க முடியும்?

அவளை பார்த்ததும் எனக்கு அவளை முத்தமிட தோன்றியது. ஆனால் எப்பொழுதும் நான் தானே தருவேன். இன்று அவள் தரட்டும். கஞ்சக்காரி! எத்தனை முறை கேட்டாலும் அவளுக்கு தோன்றினால் மட்டும் தான் கொடுப்பாள். ஆனால் என்னிடமிருந்து மட்டும் தினமும் பெற்று கொள்வாள். நான் அவள் ஆசைப்படியே உறவினர்களை அழைத்து சதாபிஷேகத்தை கொண்டாடுவதைக் காரணம் காட்டியாவது இன்றிரவு அவளிடமிருந்து ஒரு முத்தம் பெற வேண்டும்.

இரவு பாரதியார் பாட்டை கேட்டுக் கொண்டே எங்கள் அறையில் நான் படுத்திருந்தேன். லக்ஷ்மி உள்ளே வந்து அன்று நடந்ததை எல்லாம் சொல்லிவிட்டு, "ரொம்ப களைப்பா இருக்கு. நான் தூங்குறேன்" என்று படுத்து உறங்கிவிட்டாள்.

கல்நெஞ்சக்காரி! என் கண் அசைவை வைத்தே என் மன ஓட்டத்தை புரிந்துகொள்ளும் அவளுக்கு இப்போது என் ஆசை புரியவில்லையா என்ன? நடிக்கிறாள். நானும் கண்களை மூடிக்கொண்டு உறங்க தயாரானேன். வேறு வழி!

அப்போது என் அருகில் வந்து "ரொம்ப மகிழ்ச்சியா இருந்தேன்" என்று மெதுவாக காதோரம் சொல்லிவிட்டு, என் கன்னத்தில் முத்தமிட்டாள்.

'கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி' என்று பாரதியார் பாடல் வரிகள் மெல்ல ஒலிக்க, மின்விசிறியின் காற்று தென்றலாய் தலை கோத, என்னவளின் தித்திப்பான முத்தத்தை ரசித்தபடியே உறங்கினேன்.

நலம்.. நலம் அறிய ஆவல்..



சக்தி





அவனின் மின்னஞ்சல் பெட்டியில் ஒரு மின்னஞ்சல் வந்து இருந்தது.

தை மாதம் 15ஆம் தேதி, ஸ்ரீ காளயுக்தி ஆண்டு, கலியுகம் 5259. (January 30, 2159)

15 நாட்களுக்கு பின் மின்னஞ்சல்பெட்டியை திறந்து படித்தவன், அந்த மின்னஞ்சலுக்கு பதில் அளிக்க வேண்டிய கட்டாயத்தில் அவன் இருந்தும்,பணி சார்ந்த ஏதோ சில பல கணக்கிலடங்கா எண்ணலைகள் அவனை தாக்க, சட்டென அதை மூடி, படிக்காமல் இருக்கும் மின்னஞ்சல்களின் கோப்புறையில் சேர்த்துவிட்டு, அவனின் மின்னஞ்சல் பெட்டியில் இருந்து வெளிவந்தான்..

அவன் மனதில் ஓடிய எண்ணங்களின் தாக்கம் ஒரு குற்ற உணர்வா, இல்லை.. முடிந்த போன நிகழ்வுகளின் மறுபிறப்பா, இல்லை.. தேவையற்ற எண்ணோட்டங்களா, இல்லை.. வாழ்வியலின் புதிரான தடங்களா, இல்லை.. எதனால் இந்த தயக்கங்கள் எதனால் இந்த தடுமாற்றங்கள் என என்னவென்று புரியாமல் சிந்தித்து சிந்தித்து களைத்தே போனான் தமிழகிலன், வயது 27.

அவனது பெயரிலே தமிழ் இருப்பதால் என்னவோ அவனுக்கும் தமிழுக்கும் எதோ ஒரு புரியாதா உறவு இருப்பதாய் அவன் உணர்ந்து இருக்கவில்லை.. மனித பிறப்புகளின் காரணம் என்னவென்று அறிவியல் ஆயிரம் சொன்னாலும் அந்நியர்கள் ஆயிரம் சொன்னாலும், தானே தேடி அறிந்து கொள்ளாமல், இது தான் காரணம் என்பதை முடிவு செய்வதில் அவனுக்கு சிறிது தயக்கம் தான்..

சின்ன சின்ன விஷயங்களை கூட எவ்வளவு சிறிதாக பிரித்து பார்க்க முடியுமோ அவ்வளவு நுண்ணியமாக துளைத்து தேடுவதும் அவன் தான்.. பெரிய பெரிய சிக்கலான நிகழ்வுகளை கூட சில சமயங்களில், ஒரு பக்கம் அது அதுவாக இருக்கட்டும் என தட்டி கழிப்பதும் அவன் தான். இப்படி ஒரு மனவேறுபாடோடு, தனக்கு என்று எந்த குறிப்பிட்ட லட்சியமும் இல்லாதவன் போல நினைத்து கொள்பவனும் அவனே .. !

இளம் வயதிலே படித்து முடித்தவுடனே அதே தொழிநுட்ப துறையில் இந்தியா பாலைவனத்திற்கு பெயர் போன தார் பாலைவனம் அருகே அமைந்த ஒரு அயல் நாடான ஜோத்புரில் ஒரு ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட பணியில் சேர்ந்தான். வீட்டை விட்டு பக்கத்து தெருவிற்கு சென்றால் கூட அவனுக்கு அது ஒரு அயல் நாடு தான்.

அங்கே அதே துறையில் இலங்கையை பிறப்பிடமாகவும் தமிழை தாய்மொழியாகவும் கொண்ட செழியன் அகிலனுக்கு அறிமுகமாகி நண்பராகிறார். செழியன் வயதிலும் சரி, தமிழ் மொழி மேல் உள்ள அன்பிலும் சரி, அவனை விட முதுமை தான்.

ஒரு பொருளையோ உயிரையோ உருவாக்குவது அவ்வளவு எளிதல்ல. இது அனைத்திற்கும் பொருந்தும். மனிதனாகட்டும், சிறு சிறு உயிரிகளாகட்டும், இயற்கையாகட்டும், நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பொருள்களாகட்டும் ஒவ்வொன்றிற்கும் பின்னால் நாம் நினைத்து பார்த்திராத அளவிற்கு எண்ணிலடங்கா உழைப்புகள், இழப்புகள், கற்பனைகள், முயற்சிகள் என மறைந்திருக்கும்.

இப்படி மறைந்து கிடைக்கும் ஒன்றை பற்றிய ஆராய்ச்சியில் இருவரும் எதிர்கொள்ளும் இடையூறுகளுக்கிடையில் தங்களை மன அழுத்தத்தில் இருந்து தளர்த்தி கொள்ள பொழுபோக்கிற்காக சில பல வழிகளை மேற்கொண்டு வந்தனர். அதில் ஒன்று சிறிது நேரமாவது அவர்கள் ஒவ்வொரு நாளும் எதாவது ஒரு தலைப்பு பற்றி உரையாட வேண்டும் என்று திட்டத்தோடு செயல் படுத்தியும் வந்தனர். காதல், நட்பு, காலம், கடமை, பொறுமை, பெண்மை, பூக்கள், வெறுப்பு, கோபம், இயற்கை, ஏமாற்றம், வலி , தனிமை, இசை, புகழ், புத்தகம், தமிழ் என சொல்லிக்கொண்டே போகும் அளவிற்கு அவர்களின் உரையாடல்கள்.. நேரம் சிறிதெனினும், விவாதங்கள் ஒன்றும் மறக்கமுடியாத அளவிற்கும் என்றும் நினைவு படுத்தும் அளவில் இருந்தன.. !

இருவரும் உடன் இருந்த நாட்களை விட உருவாக்கிய நினைவுகள் அவர்களின் நட்பிற்கு ஒரு பெரும் ஆதாரமாய் இருந்தன..!

மார்கழி மாதம் **28** ஆம் தேதி, ஸ்ரீ காளயுக்தி ஆண்டு**,** கலியுகம் **5259.**

அன்று இரவில், மரணம் பற்றி விவாதிக்க, அகிலன், " நீங்க மனித பிறப்பு பற்றி என நினைக்கிறீங்க என்று கேட்டான்.. அதற்கு செழியன், என்ன அகிலா நாம இம்புட்டு நேரம் தூங்காம வேலை வெட்டி இல்லாம இப்படிலாம் அரட்டை அடிக்க காரணமே இந்த புரியாத புதிர் தான்..! இதுல என்னத்த விவாதம் பண்ணனும்னு பதில் அளிக்கிறார்.

சரி தான்.! அப்படியாவது கொஞ்சம் துக்கத்துல தூக்கம் வருமேனு தான் கேட்டு வச்சேன்னு அகிலன் புலம்பும் போதே, தூரத்தில் ஒரு விண்கல் வானத்துல இருந்து அவர்களை நோக்கி வருவதை பார்த்து செய்வதறியாமல் இருவரும் அதிர்ந்து நிற்க...

தூக்கத்திலிருந்து சட்டென விழித்தான் அகிலன்.. நடந்து முடிந்தது மறுபடியும் ஏனோ அவனது எண்ணங்களிலும் தொடர சில மணி நேரம் ஆதி அந்தமும் செயலிழிந்தே போனான்.. !

அது ஒரு நிகழுலக கனவா இல்லை கனவுலக நிகழ்வா என யூகிக்க முடியாத அளவில் திணறியே, இன்று வரை அவனால் அதை மறக்கவும் முடியாமல் விட்டு விலகவும் முடியாமல், அதில் தொலைந்த அவனை தேடி கண்டுபிடிக்க முடியாமல் ஆன்ம வலிமை இழந்தே இருந்தான்..!

தை மாதம் 01ஆம் தேதி, ஸ்ரீ சித்தார்த்தி ஆண்டு, கலியுகம் 5260. (January 17, 2160)

மாதங்கள் பல பல உருண்டோட தன் இயல்பற்று நின்ற அவன் எதேச்சையாய் அந்த மின்னஞ்சலை மறுபடியும் திறந்து படித்தான்..

முதலில் படிக்கும் போது அந்த மின்னஞ்சலின் பொருள் அறியாமல் சிந்திக்க மறக்கும் வேளையில், அதில் குறிப்பிட்ட சில குறியீடுகளுக்கும் அந்த விண்கல் அமைப்பிற்கும் ஏதோ தொடர்பு இருப்பதாய் யூகித்தான்..

அந்த மின்னஞ்சலை பற்றிய எல்லா தகவல்களையும் அவன் அறியவேண்டும் என இறங்கி ஆராய தொடங்கினான்..

ஆராய்ச்சிகளின் இடையே விண்கல் விழுந்த இடம், நேரம் எல்லாம் குறித்த அத்தனையும் மனதில் ஓடிக்கொண்டே இருக்க, அந்த விண்கல்லை பிரித்து பார்த்த போது மூளை தன் இயக்கத்தை சிறிது நொடிகள் மறந்து போன ஓர் உணர்வு..

அது விண்கல் அல்ல.. அது விண்வெளியில் உலவும் ஒரு அதிநவீன செயற்கைகோளின் செயலிழந்த முக்கியமான ஒரு பாகம் என்பதை அந்த மின்னஞ்சலை தொடர்புபடுத்தி தெரிய வந்தான்.. அதனை எவ்வாறு சரி செய்து திருப்பி விண்வெளிக்கே செலுத்த முடியும் என்பதையும் அந்த மின்னஞ்சலில் கண்டு கொண்டான். மின்னஞ்சலில் பதிவிட்டிருக்கும் புரியாத குறியீடுகளை தமிழிலில் மொழிபெயர்க்கும் செயலி ஒன்றையும் உருவாக்கினான்..!

மேலும் இந்த பாகத்தை சரி செய்து திரும்ப அனுப்பிவிட்டால், நீங்கள் கேக்கும் கேள்விகள் அனைத்திற்கும் பதில் கிடைக்கும் என்றும் இதை பற்றி வேறு யாரிடமும் தெரிய படுத்த கூடாது என்றும், அப்படி கூறினால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்றும் அந்த மின்னஞ்சலில் குறிப்பிட்டு இருந்தது..

ஆடி மாதம் 32ஆம் தேதி, ஸ்ரீ துந்துபி ஆண்டு, கலியுகம் 5263. (August 18, 2162)

தன் நீண்ட கால ஆராய்ச்சியிக்கு கிடைக்க போகும் மிக பெரிய வெற்றிக்காகவும் தன்னை முழுதும் அர்ப்பணித்து கடுமையாக உழைத்தான் கிட்டத்தட்ட 3 வருடங்கள்..!

திறம்பட அந்த பணியை முடித்த அவனுக்கு சில கேள்விகளுக்கு பதில் கிடைக்க வில்லை.. எங்கிருந்து இந்த மின்னஞ்சல் வந்தது..? இந்த விண்கல் பற்றியும் அதை சரி செய்வது பற்றியும் எப்படி துல்லியமாக தகவல்களை முன்கூட்டியே அனுப்ப முடிந்தது.? அதும் எனக்கு ஏன் வரவேண்டும்..? செழியனை இழக்க அந்த மின்னஞ்சலை நான் கால தாமதமாக படித்ததே காரணமா..?

நான் தான் செழியனை கொன்றுவிட்டேனா ? மனித பிறப்பின் ரகசியம் என்ன..? மரணத்திற்கு பின் புதைந்து கிடைக்கும் ரகசியம் என்ன..? இப்படி தன்னையே கேட்டுக்கொண்டே அவன், "நலம்.. நலம் அறிய ஆவல்.." என்ற தலைப்பில் வந்த அந்த மின்னஞ்சலுக்கு தன் கேள்விகள் அனைத்திற்கும் விடைகள் வேண்டுமென கலங்கி பதில் அனுப்பினான்..!

தன் கேள்விகளுக்கு விடைகள் வருமா வருமா என ஒவ்வொரு நாளும் ஏக்கத்துடன் காத்து கொண்டிருந்தான் அகிலன்.. !

அன்றிலிருந்து சிறிய சிறிய அறிகுறிகளை கூட ஆராய தொடங்கினான். செழியனின் நட்பின் ஆழம் இன்னும் அவனை வாட்டி வதைக்க, இனியும் ஒரு உயிரை தன் அலட்சியத்தால் அறிந்தும் அறியாமலும் கூட இழக்க நேரிட கூடாது என்பதில் உறுதியாய் இருந்தான்.. !

யாராக இருந்தாலும் எதுவாக இருந்தாலும் அவனை அணுகும் எல்லா விஷயங்களிலும் தன்னை சுற்றி நடக்கும் அனைத்தையும் கூர்ந்து கவனிக்க கற்று கொண்டான்.

ஒவ்வொரு மாற்றங்களும் ஒவ்வொரு செய்தியை உள்ளடக்கிருப்பதாய் அறிந்து கொண்டான்.. அவனின் யூகங்கள் அனைத்தும் பெரும்பாலும் சரியாக அமைவதை காத்திருந்து புரிந்து கொண்டான்..!

தன் கற்று கொண்ட அனைத்தையும் மற்றவர்களுக்கு புரியும் வழியில் கற்பித்து கொண்டே வாழ்ந்து வந்தான் அந்த மின்னஞ்சல் தவிர.. !

நலம்.. நலம் அறிய ஆவல் என எந்த செய்தி வந்தாலும் அதை முதலில் திறந்த படித்து சிறிது ஏமாந்தே போனான்.. ஆண்டாண்டுகள் காத்திருந்தான்.. ஏனோ அது ஒரு வடுவாய் அவனில் தங்கி போனது.. !

அவன் வாழ்வியல் மாற்றங்கள் திருமணம், குடும்பம், புது புது நட்புகள் என எல்லாரும் போலவே தொடர்ந்தது.. !

சார்ந்து வாழும் போது தான் நம் சாதனைகள் சாத்தியமாகின்றன. எல்லாம் ஒரு எழுதப்பட்ட சரித்திரமாக வாழ்ந்து கொண்டே தன் கேள்விகளுக்கு பதில் இதுவாக இருக்க கூடுமோ என யூகித்த படியே ஆண்டுகள் கடந்தான் .. !

தை மாதம் 28ஆம் தேதி, கர ஆண்டு, கலியுகம் 5292. (February 13, 2192)

தை அமாவாசை அன்று மனிதனாய் தன் வாழ்வின் இறுதி மணித்துளிகளை எண்ணி கொண்டிருந்தான். தன் இறுதி மூச்சையும் அந்த மின்னஞ்சலின் பதிலுக்காகவே காத்திருந்தான்.. பிறப்பில் தொடங்கிய மனித வாழ்க்கை இறப்பிற்கு பின் எவ்வாறு இருக்க போகிறது என்ற ஒருவித ஆவலும் அவனின் ஆழ்மனதில் ஒலித்துக்கொண்டே இருந்தது.. !

சுவாசம் நின்றும் போனது.. சில மணி நேரங்கள் கழித்து.. அந்த மின்னஞ்சல் அவனின் மின்னஞ்சல் பெட்டியை வந்தடைந்து ...

" நலம்.. நலம் அறிய ஆவல் "

தை மாதம் **29**ஆம் தேதி**,** ஸ்ரீ காளயுக்தி ஆண்டு, கலியுகம் **5319. (February 13, 2219)**

அந்த மின்னஞ்சல் திறக்கப்பட்டது....

அகிலனின் ஆராய்ச்சியை பல வருடங்கள் கழித்து தொடரும் மகிழொளி, அகிலனின் ஆராய்ச்சி பணிகளில் அவர் சேகரித்த ஆதாரங்கள் தடயங்களை, அவரின் மின்னஞ்சல் பெட்டியில் சேமித்த தகல்வல்களை, தகவல் மேலாண்மை மூலம் கிடைக்கப்பெற்று ஆராய்ந்தால் மேற்கொண்டு செயல் பட முடியும் என்ற நம்பிக்கையில் இந்த மின்னஞ்சல் திறக்கப்பட்டது..

அந்த மின்னஞ்சலில் அகிலனின் அத்தனை கேள்விகளும் பதில் வந்திருந்தன அந்நிய குறியீடுகளிலான ஒரு மொழியில்.. அதில் குறிப்பிட்ட பதிவுகளை அகிலனின் மொழிபெயர்ப்பு செயலியின் உதவியில் படிக்க தொடங்கினாள் மகிழொளி..!

மின்னஞ்சலில் குறிப்பிட்டவை அகிலனின் கேள்விகளுக்கு பதில்களாக..

எங்கிருந்து இந்த மின்னஞ்சல் வந்தது**..?** இந்த விண்கல் பற்றியும் அதை சரி செய்வது பற்றியும் எப்படி துல்லியமாக தகல்வல்களை முன்கூட்டியே அனுப்ப முடிந்தது**.?** அதும் எனக்கு ஏன் வரவேண்டும்**..?** செழியனை இழக்க அந்த மின்னஞ்சலை நான் கால தாமதமாக படித்ததே காரணமா**..?** நான் தான் செழியனை கொன்றுவிட்டேனா **?** மனித பிறப்பின் ரகசியம் என்ன**..?** மரணத்திற்கு பின் புதைந்து கிடைக்கும் ரகசியம் என்ன**..?**

பூமியை போல பல கோடி கிரகங்களை கண்காணிக்கும் ஒரு மைய அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உங்கள் சூரிய குடும்பத்திற்கு அருகே உங்கள் சூரிய குடும்ப கிரகங்களின் செயல்பாடுகளை கண்டறியும் கிரக தணிக்கை நிலையங்களின் முதன்மை அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட செய்தி அதுவும் இதுவும்..

உங்கள் கிரங்களின் ஒவ்வொரு அசைவுகளும், ஒவ்வொரு கிரங்களில் உள்ள அத்தனை கிரக வாசிகளின் அசைவுகளும் ஆதவனான சூரிய நட்சத்திரத்தை பொறுத்தே அமையும்..

பூமியில் உள்ள கிரகவாசிகளில் மனிதன் ஒரு ஆதிக்க உயிரினமாக பல கோடி ஆண்டுகளுக்கு பிறகு உருப்பெற்றான்.. ஒவ்வோர் கிரக வாசிகளின் கட்டுப்பாடுகள் எங்களால் வரையறுக்கப்படும்.. மனிதன் உருப்பெறும் முன் சுமார் 250 மில்லியன் வருடங்களுக்கு முன் வாழ்ந்த டைனோசர் உயிரினங்கள் அந்த கால பொழுதின் ஆதிக்க உயிரினமாக கருதினோம்..

பூமியை உருவாக்கிய காலம் தொட்டு பூமியில் வெவ்வேறு கால கட்டங்களில் உருப்பெற்று வாழும் ஒவ்வொரு உயிரினங்களையும் கண்காணித்து வருகிறோம். நாங்கள் கட்டமைத்த பூமியை அழிக்கும் சக்தி,

அந்த கிரகவாசிகளின் செயல்பாடுகளே பொறுத்தே அமையும். இதில் தற்போது நாங்கள் கருதும் ஆதிக்க உயிரிகள் மனிதர்கள். அவர்களின் பங்கு இந்த பூமியை காப்பதிலும் அழிப்பதிலும் முதன்மையாய் இருக்கும்.. !

250 மில்லியன் வருடங்களுக்கு முன் வாழ்ந்த டைனோசர் உயிரினங்கள் வாழ்வியல் முறைகளை தாண்டி மற்ற உயிரிகளிடத்தில் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தி மற்ற உயிரினங்களிடத்தில் மிக பெரிய இன அழிவையும், அது சார்ந்த இயற்கை மாற்றத்தையும் பூமியில் கொண்ட வந்தன.. இதன் விளைவில் இருந்து பூமியை காப்பதற்க்காக நாங்கள் ஆதிக்க உயிரினத்திடம் பல முறை செய்திகளை அனுப்பியும் எந்த பலன்களும் இல்லை.. !

பூமியை இழக்க கூடாதென எங்கள் மைய செயலகத்திலிருந்து கிடைக்க பெற்ற ஆணையின் பேரில் ஆதிக்க உயிரினங்களை, மிகப்பெரிய விண்கற்களை பூமியில் செலுத்தியும், எரிமலை மற்றும் மின் அதிர்வுகளை உருவாக்கியும் ஒரு பெரிய இன பேரழிவிற்கு வித்திட்டோம்..

இந்த மிக பெரிய அழிவிற்கு பிறகு பூமியில் கால இடைவெளிகளில் மிக பெரிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டது.. அப்படி உருவாக்க பட்ட உயிரினங்களில் மனிதன் ஆதிக்க சக்திகளை கொண்டு விளங்கியதால் அவனை கூர்ந்து கவனித்து வந்தோம்... ஒவ்வொரு மனிதனின் பிறப்பும் இறப்பும் முடிவு செய்வதை எங்கள் செயலகம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது..

பிறப்புக்கும் இறப்புக்கும் நடக்கும் வாழ்வியல் அவனின் மூளையின் செயல்பாட்டை பொறுத்து அமையுமாறு மனிதன் உருவாக்கப்பட்டான்.. ஒவ்வொரு மனித மூளைகளின் கட்டுப்பாடு அவரவரிடமும், எங்களது கட்டுப்பாட்டிலும் ஒரு நகல் இருக்கும்..

உன் (அகிலன்) நகல்களை கொண்டு, நாங்கள் அனுப்பும் செய்தியை படிக்கும் திறமை உள்ளவன் என்பதை அறிந்து கொண்டு உனக்கு அனுப்பப்பட்டது அந்த செய்தியும், விண்கல் மாதிரியான செயற்கைகோள் பாகமும்.. இந்த செய்தியை உன்னை போல இன்னும் பல மனிதர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.. மற்றவர்களின் நிராகரிப்பால் இந்த செய்தி ஒரு குப்பையாகவும் வெறும் விண்கல்களாகவும் ஒதுக்கப்பட்டது பல ஆண்டுகளாக... எல்லாம் அவர்களின் எண்ணங்களின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டது..
நீ அதை ஆராய்ந்து உனக்கு எங்கள் குறியீடுகளை படித்து உணரும் திறமையை வெளிக்கொண்டு வர முடியும் என்பதை நிருபித்து விட்டாய்... அதன் அடிப்படையில் உனக்கு இந்த பதில் செய்தி அனுப்பப்பட்டுள்ளது..

உன்னுடைய கால தாமதத்தால் நீ செழியனை இழந்தாய்.. கால தாமதமும் உன் எண்ணங்களின் வெளிப்பாடே.. இழப்பும் வாழ்வின் ஒரு சாயல் என்பதை காலம் உனக்கும் உணர்த்தியிருக்கும்.. அது கொலை இல்லை.. இது கிரக வாசிகள் அறியா வகைப்பாடுகள்... செழியன் இறப்பு நிர்பந்திக்கப்பட்டது என்றோ.. உனக்கும் அந்த நிகழ்விற்கு எவ்வித தொடர்பும் இல்லை..

மேலும்,

ஆதிக்க உயிரிகளான மனித உயிர்களின் செயல்பாடுகள் பூமிக்கு மிக பெரிய விளைவை உண்டாக்கும் வகையில் இருப்பதினாலும், மற்ற உயிரினங்களின் இன அழிவு விகிதங்கள் அதிகமாகி உள்ளதாலும், இயற்கை சுற்றுசூழலுக்கு எதிராக இருப்பதாலும் இந்த மின்னஞ்சல் ஒரு மிகப்பெரிய எச்சரிக்கையாக அனுப்பப்படுகிறது...

பூமியின் பேரழிவும் மற்ற கிரக வாசிகளின் பேரழிவும் மனித உயிரிகளின் செயல்பாடுகளின் விளைவுகளால் இருப்பதால், இனி வரும் காலங்களில் நிராகரிக்கப்படும் ஒவ்வொரு நற்செயல்முறைகளும் மனித இன அழிவிற்கு சாத்திய கூறாக அமைய நேரிடும் என்பதை கண்டிப்போடு வற்புறுத்துகிறோம் என்றும் அந்த மின்னஞ்சலில் குறிப்பிட்டிருந்ததை மகிழொளி படித்து வாயடைத்து செய்வதறியாமல் வியந்து இருந்தாள்..!

மாசி மாதம் 12ஆம் தேதி, ஸ்ரீ துர்முகி ஆண்டு, கலியுகம் 5117. (February 24, 2017)

"அப்பா, இந்த கதையோட முடிவு என்ன.. அப்படி என்ன தான் இந்த மனிதர்கள் பண்ணிட்டு இருக்காங்க.. என்ன என்ன பிரச்சனைகள் இருக்கு இந்த பூமியில.. எப்படி தான் சரி பண்றது அதுலாம் சொல்லுங்க பா.. எப்படி..? நான் என்ன பண்ணனும் சொல்லுங்க " என்று குட்டி மேகவதி தன் அப்பா துருவிடம் துருவி துருவி கேட்க...

அதற்கு துருவ், ஹாஹாஹாஹாஹா என முதலில் சிரித்து வைத்தான்.. உனக்கு கதை புரிஞ்சதா முதல்ல ...? எனக்கே அங்க அங்க தூக்கம் வந்துடுச்சு... நீ கேள்வி வேற கேக்கற..

நம்ம சிந்தனைகள் நல்ல நோக்கத்திற்காக பொது நலத்தோட இருந்தாலே போதும் குட்டி.. எல்லாம் சரி ஆகிடும்.. இந்த உலகத்துல இருக்கிற எல்லா மனிதர்களும் இந்த மாதிரி சிந்திக்க மாட்டாங்க.. ஆனா அப்படி எண்ணங்களை கட்டுப்படுத்தி சிந்திக்க வைக்க தெரிஞ்சக்கிட்டு மத்தவங்களுக்கு கத்துகுடுக்கணும்.. அப்பவே சரியாக ஆரம்பிச்சிடும்.. என துருவ் சொல்லும்போதே...

ஹம்ம்கும் இதுக்கு கதையே கொஞ்சம் நல்லா புரியுது என மேகா குழம்பி செல்லமாக திட்ட...
பள்ளிக்கூடத்துல நீ கதை போட்டியில சேரனும்னு சொன்ன.. அதான் இத கிறுக்கி வச்சிருக்கேன்.. கொண்டு போய் சப்மிட் பண்ணு.. டீச்சர் ஏதும் கேள்வி கேட்டா எங்க அப்பா தூக்கத்துல எழுதினாங்கனு சொல்லி தப்பிச்சிடு.. ஹாஹாஹாஹாஹா என வாய்விட்டு சிரித்தான் தன் மகளோடு.. !

சரி என்ன தலைப்புனு சொல்லுங்க பா.. !

"நலம், நலம் அறிய ஆவல்" னு வச்சிக்கலாம்.. !

பூமியோட நலம் தெரிய நாமளும் நம்ம நல்ல சிந்தனை மற்றும் செயலோடு காத்திருப்போம் குட்டி..!

பின் குறிப்பு :
தனக்குள் மறைந்து கிடந்த தமிழ் ஆர்வத்தை தன் நட்பின் மூலம் தூண்டி, எண்ணற்ற படைப்புகளை உலகிற்கு தந்த அகிலனும், இந்த கதை எழுதிய நானும் முன்னாள் கிரகவாசியான அகிலனின் தோழர் செழியனுக்கு சமர்ப்பிக்கிறோம்...!
நலம்..! நலம் அறிய ஆவல்..!

Disclaimer:
இது ஒரு புனைகதைப் படைப்பு. இந்தக் கதையில் சித்தரிக்கப்பட்டுள்ள அனைத்து கதாபாத்திரங்கள், நிகழ்வுகள், இடங்கள் மற்றும் அமைப்புகள் ஆசிரியரின் கற்பனையின் விளைபொருளாகவோ அல்லது கற்பனையாகப் பயன்படுத்தப்பட்டதாகவோ இருக்கலாம். வாழும் அல்லது இறந்த உண்மையான நபர்களுடன் அல்லது உண்மையான நிகழ்வுகளுடன் எந்த ஒற்றுமையும் இருந்தால் அது முற்றிலும் தற்செயலானது. இந்தக் கதை பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக மட்டுமே வடிவமைக்கப்பட்ட கற்பனைக் கூறுகளைக் கொண்டுள்ளது மற்றும் நிஜ உலக நம்பிக்கைகள், நடைமுறைகள் அல்லது சித்தாந்தங்களை பிரதிபலிக்கவில்லை.

கேலக்ஸி வெளியீடுகள்



9994434432

WWW.GALAXYBS.COM

கேலக்ஸி வெளியீடுகள்



9994434432

WWW.GALAXYBS.COM